AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 26

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

ஆன்மீக விஞ்ஞான இதழ்

இணையதளம் வாயிலாக மாதம் ஒரு முறை வெளிவரும்



## ஸ்ரீ வைகுண்ட ஏகாதேசி புண்ணிய தினம்!

★ நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ ஸ்ரீ நித்திய க்லின்னா எந்திரம்

★ கவலைகளை போக்கும் காளி வழிபாடு ★ ஆருத்ராவன்று தரிசித்தாலே பலன்...

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai




எல்லையில்லா தொல்லை தந்து இன்னலில் தவிக்கவிட்ட 20-ம் 21-ம் நம்மை விட்டு அகன்று 2022 என்னும் புத்தாண்டு- பொன்னாண்டு பிறக்கப் போவதை எதிர்நோக்கி, இருண்ட காலத்தின் துயரங்களிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு, சற்றே புத்துணர்வோடு புது நடையைத்துவக்கி இருக்கிறோம். இந்நிலையில் புயல், வெள்ளம் போன்ற பேரிடர்கள் நம் நம்பிக்கையை கொஞ்சம் அசைத்துப் பார்த்திருக்கிறது! கொடிய தொற்றின் கரங்களிலிருந்தே விடுபட்ட நாம், இயற்கையின் சீற்றத்தையும் கடந்து மீண்டும் ஒரு புத்துலகம் படைக்க விருக்கிறோம். வருகிற ஆண்டு, வளமிக்க ஆண்டாக அமைய வேண்டும்; கண்ணுக்குத் தெரியாத தொற்று முதல் கரைபுரளும் வெள்ளம் வரை, நம் கனவுகளை சிதைக்காமல் இருக்க வேண்டும்!

பொன்னெழில் பூக்கும் புன்னகை ததும்ப புத்தாண்டு அமைய வேண்டி, இறைவனை மனமார வேண்டுவோம்! எல்லாம் வல்ல இறைவனின் அருளால் இன்பங்கள் மலர, வேண்டும்

அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# 2021 – டிசம்பர் மாத காலண்டர்

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | அரசு விடுமுறை நாட்கள் 25 | | பிரதோஷம் 1 | 2 | 3 | அமாவாசை 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | ஏகாதசி 14 | பிரதோஷம் 15 | 16 | 17 | பவுர்ணமி 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 கிறிஸ்மஸ் |
| 26 | 27 | 28 | ஏகாதசி 29 | 30 | பிரதோஷம் 31 | |

# ஸ்ரீ வைகுண்ட ஏகாதேசி புண்ணிய தினம்!

~ ஆரூரன்

ஸ்ரீமகா விஷ்ணுவை ஆராதிக்க மிக உகந்த தினம்தான் ஏகாதேசி.
காயத்ரீயை விட சிறந்த மந்திரமில்லை, கங்கையை விட சிறந்த நதியுமில்லை. ஸ்ரீமகா விஷ்ணுவை விட சிறந்த தெய்வமுமில்லை. தாயினும் சிறந்த எக்கோயிலும் இல்லை!

அதுபோன்ற விரதங்களுக்குள் வைகுண்ட ஏகாதேசி போன்ற சிறந்த விரத புண்ணிய தினமில்லை என்பார்கள் ஆன்றோர்கள்.
ஆண்டு தோறும் இடம்பெறும் 25 ஏகாதசி தினங்களில் மிக உயர்வாகப் போற்றப்படுவது மார்கழித் திங்களில் சுக்ல பட்சத்தில் (வளர்பிறை) வரும் வைகுண்ட ஏகாதசியே!.

இதற்கு முக்தியை தரக்கூடியது என்ற பொருளைத்தரும் மோஷதா ஏகாதசி என்றும், மூன்று கோடி தேவர்களும் அன்று ஏகாதசி தினத்தில் ஸ்ரீமகா விஷ்ணுவை ஆராதிப்பதால் முக்கோடி ஏகாதசி என்றும் இப் புண்ணிய தினத்தில் திருமாலை பூஜிப்பவர் வைகுண்டத்தை போன்ற சுபங்கள் இம்மையிலும், அவரவர் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் ஸ்ரீவைகுண்ட பதவியும் கிட்டும் என்பதால் அதற்கு வைகுண்ட ஏகாதேசி என்ற பெயரும் உண்டானது என புராண தகவல் ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.

வைகுண்ட ஏகாதேசி அன்று நாள் முழுவதும் உணவு, ஜலம் முதலிய எதையும் உட்கொள்ளாது விரதமிருந்து சுத்த உபவாசம் மேற்கொண்டு ஸ்ரீலட்சுமி நாயகனை ஆராதிக்க வேண்டும்.
தவிர இந்நாளில் வீண் பேச்சு, விவாதங்களை தவிர்ப்பதும், ஸ்ரீ பாகவதம், விஷ்ணு சஹஸ்ரநாமம், திவ்ய பிரபந்தம் ஆகியவற்றை சிரத்தையுடன் பாராயணம் செய்வதும் நன்மை பயக்கும் என்றும் பெரியோர்கள் உரைப்பார்கள்.

மாதந்தோறும் இரு முறை நிகழும் ஏகாதசி நாளில் எட்டு வயது முதல் 80 வயது வரை உள்ள அனைவரும் உபவாசம் மேற்கொள்ள வேண்டுமென சாஸ்திரத்தில் அருளப்பட்டுள்ளது.
குறிப்பாக அத்தகையோர் ஸ்ரீ வைகுண்ட ஏகாதேசி புண்ணிய நாளில் உபவாசம் மேற்கொள்வது உத்தமமானதாகிறது.

இப்படி ஐந்து புலன்களாலும், ஸ்ரீவைகுண்ட வாசியான ஸ்ரீ விஷ்ணுவை ஆராதிப்பவர்களுக்கு நிச்சயம் குடும்ப ஒற்றுமை, மனச்சாந்தி இவற்றுடன் மிகப்பெரிய பரிசாக ஸ்ரீ லட்சுமி கடாட்சமும் உண்டாகும் என சாஸ்திர நூலில் உபதேசிக்கப்பட்டுள்ளது.

இந்த பல்வ ஆண்டில் வரும் மார்கழி மாத சுக்லபட்ச 28ம் தேதிக்கு இணையான டிசம்பர் 14ம் நாளில் (14.12.2021) வரும் ஸ்ரீரங்க வைகுண்ட ஏகாதேசி அன்று, இயன்றவர்கள் விரதம் மேற்கொண்டு நற்பயன்கள் பெறுவோம்!



# பரமேஸ்வரனுக்கு அருளிய பரமன்!

~ கீதா மணி

முப்பெரும் தேவர்கள் என்று நம்மால் போற்றப்படுபவர் பிரம்மா, சிவன், விஷ்ணு என்ற தெய்வங்கள். புராணங்களில் வெவ்வேறு சமயங்களில் இந்த மூன்று தேவர்களும் பரஸ்பரம் மற்றவர்களுக்கு உதவிகள் புரிந்த அநேக சம்பவங்கள் கூறப்பட்டுள்ளன.

கயிலை நாதனான பரமேஸ்வரனுக்கு, ஸ்ரீரங்கத்தில் குடிகொண்ட நாயகனான அரங்கன் ஒரு சமயம் பாஞ்சராத்ர ஆகம ஐந்தாம் பகுதியை உபதேசித்து அருளியுள்ளார்.

பெருமாள் முதல் பகுதியை ஆழ்வார் ஆதிசேஷனுக்கும், இரண்டாம் பகுதியை கருடாழ்வாருக்கும், மூன்றாம் பகுதியை தன்னுடைய படைத் தளபதி விஷ்வக்சேனருக்கும், நான்காம் பகுதியை பிரம்மாவிற்கும், இதற்கு முன்பே உபதேசித்துள்ளார் என புராணம் கூறும்.

ஒரு சந்தர்ப்பத்தில் திருமாலை நாடிச் சென்று தனக்கு விசேஷம் பொருந்திய ஒரு ஆயுதம் வேண்டுமென்றும், அதற்கு எத்தகைய வழிபாட்டு முறையில் தான் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டார், சிவன். அதற்குப் பெருமாள், ”செண்பக ஷேத்திரமாக விளங்கும் மன்னார்குடியில் நான் இராஜகோபாலனாக எழுந்தருளியுள்ளேன். லட்சக்கணக்கில் அத்தலத்தில் செண்பகப் பூக்கள் மரங்களில் பூத்துக் குலுங்கும். நீங்கள் அங்கே சென்று ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் உள்ள 1000 திருநாமங்களையும் சொல்லி அந்த இராஜகோபாலனை 1000 செண்பக மலர்களால் அர்ச்சித்தால் அதன் விளைவாக நீங்கள் கோரும் அற்புத ஆயுதம் கிட்டும்! ” என்று கூறி வழிகாட்டினார்.

அதன்படி ஈஸ்வரன் மன்னார்குடி தலம் சென்று, மகாவிஷ்ணுவின் திருக்கண்கள் எனபோற்றப்படும் இராஜகோபாலனின் திருக்கோயில் சென்றார்.

ஆயிரம் செண்பக மலர்களை தங்கத்தட்டில் வைத்து, சிவபெருமான், ஒவ்வொரு பெருமாளின் திருநாமத்தையும் ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் அருளப்பட்ட படி அவரை அர்ச்சிக்கத் தொடங்கினார்.

பெருமாளின் 998 திருநாமங்களையும் உச்சரித்து பரமேசுவரன் அர்ச்சித்துக் கொண்டே வந்து 999 வது பெருமாள் நாமமான “அஷோப்யாய நமஹ” என்று உச்சரித்து செண்பக மலரை அர்ச்சித்து ஸ்ரீ ராஜகோபாலனுக்குக்கு சமர்ப்பித்து விட்டு அவரது கடைசி 1000 மாவது நாமாவை ஈசுவரன் உச்சரிக்கும் முன்பு மலரை எடுக்க தட்டை பார்த்தால் அதில் ஒரு மலர் கூட பாக்கியில்லை.
எப்படி இந்த எண்ணிக்கை கோளாறு உண்டானது என சற்று திகைத்துப்போன சிவன், அடுத்தக் கணமே எதுவும் யோசிக்காது செண்பக மலர் போல் தோன்றும் தனது மூக்கையே கிள்ளி 1000 வது விஷ்ணு சஹஸ்ர நாமாவான “ஸர்வப்ரஹரணாயுதாய நமஹ“ என்பதை உச்சரித்து அதனை திருமாலின் திருவடிகளில் சமர்ப்பிக்க முற்படுகையில், இராஜகோபால பெருமாள் சட்டென்று அவரை தடுத்தார். ”உமது பக்தியின் பரிசாக உமக்கு இந்த சூலாயுதத்தை அளிக்கிறேன்!” எனக்கூறி மலர்ச் சிரிப்புடன் அதனை வழங்கினார்.

இப்படித்தான் கயிலை நாதனுக்கு சூலாயுதம் வந்து சேர்ந்தது.

ஆண்டுதோறும் இடம்பெறும் ஸ்ரீ வைகுண்ட ஏகாதேசி, நிகழும் பிலவஆண்டில் கார்த்திகை மாதம் செவ்வாய் கூடிய 28 ம் நாளன்று (அதாவது 2021 ஆண்டின் டிசம்பர் 14ம் தேதி) வர, அன்று காவிரிக்கரையில் அரங்கனாக துயில் கொண்டுள்ள ஸ்ரீரங்க தலத்தில், அந்தப் புண்ணிய நாள் இதர வைணவ ஆலயங்களை விட மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதேசியென்றே அதனை உயர்த்தி அழைப்பார்கள்.

முன்பே குறிப்பிட்டபடி திருவரங்கத் திருத்தலத்தில்



துயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ ரங்கனின் திருக்கண்களாக மன்னார்குடி இராஜகோபால சுவாமி திகழ, இதர வைணவத் தலங்களில் இப்படி அவரது இதர அவயங்கள் இடம்பெற்றுள்ளன.

பத்ரிநாத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பத்ரி நாராயணன் அரங்கனின் தலையாக, புஷ்கரத்தில் ஏரி வடிவில் உள்ள பெருமாள் அரங்கனின் நாக்காகவும், குருஷேத்திரத்தில் குடிகொண்ட திருமால் அவருடைய வாயாகவும், அயோத்தியில் காட்சித்தரும் ஸ்ரீராமர், அவரது கழுத்தாகவும், திருப்பதி அப்பன், அரங்கனின் திரண்ட மார் பாகவும், பூரிதல ஜகன்நாதர், அவருடைய வாயாகவும், ஆந்திர மாநில, ஸ்ரீ கூர்ம சேஷ்திரத்தில் அருளும் கூர்ம மூர்த்தி அவரது முதுகு ஆகவும், தமிழக ஸ்ரீமுஷ்ணத் தலத்தில் வரமருளும் ஸ்ரீ வராஹர் அவருடைய குரலாகவும், மதுரை ஸ்ரீ கள்ளழகர் அவரின் திருக்கரங்களாகவும், திருக்கண்ணபுரம ஸ்ரீ சௌரிராஜன் ரங்கனின் நடையாகவும், கும்பகோணத்தில் ஸ்ரீ சாரங்கபாணி, அவருடைய பூரணத்துவம் பெற்ற அழகாகவும் விளங்கி வருகிறார் என்பதை புராண நூலொன்று போற்றி கூறுகிறது;

எத்தனையோ பெருமைகளைக் கொண்ட, புண்டரீகம் என்று பெயர் கொண்ட ஸ்ரீ வைகுண்ட நாதனான திருமாலைப்போற்றி, ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியன்றும் நற்பயன் பெறுவோம்!


Special Birthday Ritual Packages for You
Get 40% OFF
Call: 88702 88701


# நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ ஸ்ரீ நித்திய க்லின்னா எந்திரம்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

நித்தியக்லின்னா என்றால் எந்த நேரத்திலும் அருளக்கூடியவர் என்று பொருள்படும். ஒருவர் பிறந்த நாள் அன்று உள்ள திதியானது வளர்பிறை திருதியை திதியாக இருந்தாலும் தேய்பிறை திருதியை திதியாக இருந்தாலும் இந்த திருதியை திதியை ஆள்பவர் ஸ்ரீ நித்திய க்லின்னா தேவி ஆவார். இவரது இதயம் கருணை நிறைந்தது. இந்த நித்திய க்லின்னா தேவியானவர் நமது உடலுக்கு போஷாக்கை அளிக்க கூடியவர். எனவே நமக்கு எந்த நோய் வந்து இருந்தாலும் நம் உடலுக்கு ஊட்டமளித்து நோயிலிருந்து நம்மை விடுவித்து காக்கும் சக்தியை பெற்றவர் இந்த நித்திய க்லின்னா தேவியாவார். நாம் பூரண உடல் நலத்துடன் நீண்ட நாள் வாழ்ந்தால் தான் இகலோக சுகங்களான பொன், பொருள், வீடு, மனை, வாகனம் போன்றவற்றை தங்கு தடையின்றி அனுபவிக்க முடியும். இது மட்டும் அல்லாமல் கணவன் மனைவிக்கு இடையே எந்த பிரச்சினையாக இருந்தாலும், அந்த பிரச்சினைகளை தீர்த்து தம்பதிகளுக்கிடையே அன்யோன்யத்தை ஏற்படுத்தி நல்லுறவை நீட்டிக்க செய்பவர். முறிந்த உறவுகளை இணைக்கும் பாலமாக செயல்படக்கூடியவர் நித்தியக்லின்னா தேவியாவார்.

இந்த ஸ்ரீ நித்தியக்லின்னா தேவி எந்திரத்தை பூஜை அறையில் கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்து, தினமும் முல்லை மலர் கொண்டு பூஜித்து தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் போஷாக்குடன் நோய் இன்றியும் பிற குடும்ப உறுப்பினர்களுடன் நல்ல உறவுநிலையுடன் நீண்ட நாள் வாழலாம்.

ஸ்ரீ க்லின்னா நித்யா தேவி எந்திரத்திற்கு உண்டான மூல மந்திரம்:
"ஓம் ஐம் கிலீம் ஸ்ரீம் ஹ்ரீம் நித்யக்லின்னா தேவியே நமஹ"



Nityaklinna



# மஞ்சள்

~ கீதா மணி

**மஞ்சள்**

நம்மால் புனித மங்கலப் பொருட்களில் ஒன்றாக கருதப்படும் மஞ்சள் செடி பல மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது.

குளிக்கையில் மஞ்சளை முகத்திலும், உடலிலும் பூசிப் பயன்படுத்தும் பெண்களின் உடல் பொன்னிறம் அடையும். சமையலில் இடம்பெறும் மஞ்சள்தூள் நல்ல பசியைத் தூண்டுவதோடு வாந்தி, வாத, பித்த, கபம், வியர்வை மற்றும் தேவையற்ற முடியையும் நீக்கி விடும் இயல்பு உடையது.

மஞ்சள் கலந்த குடிநீரை பருகி வரும் காமாலை நோய் கொண்டோர் அதிலிருந்து விரைவில் குணம் பெறுவார்கள்.

மஞ்சளுடன் சம அளவு வேப்பிலையும் நீர்விட்டு அரைத்துப் பற்றுப்போட அம்மை கொப்புளங்கள், சேற்றுப் புண், நாள்பட்ட புண்கள் ஆறும் என நாட்டு வைத்திய நூல்களில் கூறப்பட்டுள்ளது.



மஞ்சள் செடியில் பூக்கும் மலர்கள் கண்நோய் போக்கும் இயல்புடையது எனவும் கண்டுபிடித்துள்ளார்கள்.

**குட்டிப்பலா எனும் பிராயன்**

குட்டிப்பலா என்ற செடியின் பழங்கள் சாப்பிட சுவையானது.

இச்செடியின் இலைகள் சுரக்கும் பால் மூலம் கறந்த பாலை உறைய வைக்கலாம்.

குட்டிப்பலாவின் தழைகளை கால்நடைகளுக்கு தொடர்ந்து கொடுத்தால் அவற்றின் பால் சுரப்பு அதிகமாகும் என கண்டறியப்பட்டுள்ளது.

# எதிரிகளை வென்றிட....

~ ரா.பன்னீர் செல்வம்

சௌந்தரிய லஹரியின் 26வது பாடலில் "எதிரிகளை வென்றிட" அருமையான மந்திரம் அடங்கியுள்ளது! அந்த மந்திரப் பாடல் அன்னையின் யவ்வனத்தை எவ்வாறு வர்ணிக்கிறது என்று பார்க்கலாம்.

மந்திரப் பாடல்:
"விரிஞ்சி: பஞ்ஜத்வம் வ்ரஜதி ஹரிராப் னோதி விரதிம் விநாசம் கீனாசோ பஜதி தளதோ யாதி நிதனம்விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீவித - த்ருள் மஹா - ஸம் ஹாரே (அ) ஸ் மின் விஹாதி ஸதி த்வத்பதி ர ஸௌ."

பாடலின் பொருள்:
தாயே! உன் படைப்பில் பிரம்மனுக்கும் விஷ்ணுவிற்கும் முடிவுண்டு! எமன் கூட ஒரு கட்டத்தில் நாசமடைகிறான். அடுத்தடுத்து வரும் இந்திராதி தேவர்களும் அழிவினை அடைகிறார்கள்! ஆனால், ஒளிமிகுந்த அழகு பொருந்திய அமிர்ததாயே! உன் பதியான சிவன் மட்டும் அழியாப் பெரு நிலையை அடைந்துள்ளாரே! அதை என்னவென்று சொல்வது?..

இந்த மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:
இந்த மந்திரத்திற்கான இயந்திரத்தை தங்கம் அல்லது காரீயத் தகட்டில் வரைந்து பூஜைக்குப் பயன்படுத்த வேண்டும்.

அமாவாசையில் மட்டும் அதாவது 6 அமாவாசை தினங்களில் வடக்கு முகமாக அமர்ந்து இந்த மந்திரத்தினை ஜபிக்க வேண்டும். பூஜையின்போது குங்குமத்தை கொண்டு லலிதா த்ரசதி அர்ச்சனை செய்வது நலம்! அப்போது தேங்காய், வாழைப்பழம், சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் செய்வது சிறந்த பலனைத் தரும்.

இப்படி செய்து வந்தால் எதிரிகள் தொல்லை ஒழியும்! எடுக்கின்ற அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும்! தடைகளும் எதிரிகளும் இல்லாத வாழ்வினை பெறலாம்!



# கங்கை, காவிரியை இணைத்த மகான்!

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

எந்தரோ மஹாநுபாவு (...லு)
அந்தரிகி வந்தநமு

என்ற வரி கொண்ட பஞ்சரத்னக்ருதியின் ஐந்தாம் கீர்த்தனையில் மகான் திருவையாறு தியாகராஜர் இறைவனைத் துதித்து வேண்டுவார். அதன் தமிழாக்கம் இப்படி அமையும்.
"எத்தனையோ மஹாநுபாவர்கள்! அத்தனை பேரையும் வணங்குகிறேன்"
என,



அப்படிப்பட்ட பல மகான்கள் நம் நாட்டில் அவதரித்து பொது ஜனங்களுக்கு பக்தி உணர்வைத் தூண்டக் காரணமாக இருந்துள்ளனர், அவர்களில் ஒரு மகானாக திகழ்கிறார் ஸ்ரீதர ஐயாவாள் என்பவர்.

அக்காலத்தில் மைசூர் மன்னரின் சமஸ்தான வித்வானாகவும், அமைச்சராகவும் பணிபுரிந்து வந்த ஸ்ரீ மான் லிங் கார்யர் என்ற கன்னட அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவரின் பிள்ளையே இந்த ஸ்ரீதர ஐயாவாள். தன் தந்தையைப் போலவே சிறந்த சிவ பக்தர் அவர். அதுமட்டுமின்றி சிறு வயது முதலே வேத தர்மங்கள் அனைத்தையும் கற்று அடக்கமாக வாழ்ந்து வந்தார் ஐயாவாள்.

மைசூரில் அரண்மனை போன்ற வீடும், திரண்ட சொத்துக்களும் ஸ்ரீதர ஐயாவாளுக்கு இருந்தும் அவர் அவைகளில் நாட்டமின்றி எளிய வாழ்க்கையையே விரும்பினார். உரிய காலத்தில் லிங்கார்யர் தனது பிள்ளைக்கு லட்சுமி என்ற குணவதியை திருமணம் செய்துவித்தார்.
கொஞ்ச காலம் சென்ற பிறகு அவர் சிவனடியை சேர்ந்து விட்டார்.

மைசூர் மன்னர் ஐயாவாளின் அபார புத்தி, பலவகைத்திறன்கள், பூண்ட சிவபக்தி அனைத்தையும் பற்றி கேள்விப்பட்டிருந்ததால், அவருக்கு ஆஸ்தான வித்வான் மற்றும் அமைச்சர் பதவியை தர விரும்பினார். ஆனால் ஐயாவாள் கொண்டிருந்த ஆன்மீக நாட்டம் பதவியை தவிர்க்க விரும்பவே, நாசூக்காக மன்னரிடம் இதனை தெரிவித்துவிட்டார்.

பல நாட்கள் சிந்தித்து தான் எடுத்த முடிவின்படி ஐயாவாள் நாடெங்கும் பயணித்து, ஆங்காங்கே உள்ள புண்ணிய நதிகளில் நீராடி, இறை தரிசனங்கள் பெறவும், உஞ்சவிருத்தி எடுத்து எளிய வாழ்க்கையை மேற்கொள்ளவும் தீர்மானித்தார். இந்த முடிவை அவர் தனது அன்னை மற்றும் மனைவியிடம் ஒருநாள் தெரிவித்தபோது தாங்களும் அவர் கூடவே வருவோம் என உறுதியாகச் சொல்லி விட்டார்கள் அவர்கள்.

குறித்த புண்ணிய நாளில் ஐயாவாள் உள்ளிட்ட குடும்பம் மைசூரை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டது. இதற்கு சில தினங்கள் முன்பே, அவர் தன் திரண்ட சொத்துக்களை பிரித்து பல ஏழை, எளிய

மக்களுக்குப் பிரித்துக் கொடுத்து விட்டார்.

ஐயாவாள் மைசூரிலிருந்து புறப்பட்டு பல தலங்களுக்குச் சென்று புனித நீராடி, நித்ய கர்ம அனுஷ்டானங்களை சரிவர செய்து கொண்டு, பல ஆலய தரிசனங்களையும் பெற்று வந்தார். அவர் எடுத்துவரும் தானி உஞ்சவிருத்தியத்தை கொண்டு தான் அவரது குடும்ப வாழ்க்கை நடந்து வந்தது.

நித்ய கர்மாக்கள், இறை தரிசனம் முடிந்தவுடன் தான் தங்கும் தலங்களில், பகலிலும், இரவிலும் ஐயாவாள், பாகவதம், இராமாயணம், சிவபுராணம், மகாபாரதம், ஸ்காந்தம் போன்றவற்றை மக்களுக்கு எடுத்துரைப்பதை ஒரு தினசரி கடமையாகக் கொண்டிருந்தார்.

இப்படி ஒவ்வொரு தலமாக பயணித்து ஆங்காங்கே ஆலய தரிசனங்களைப் பெற்று வந்த ஐயாவாள் சுவாமிகள் தன் வழியில் திருச்சிராப்பள்ளி வந்து அங்கேயே சிலகாலம் தங்கி விட்டார்.
தனது அன்றாட வழக்கப்படி அதிகாலை காவேரி நதியில் ஸ்நானம் புரிந்து விட்டு ஒரு நாள் சுவாமிகள் நித்திய அனுஷ்டானங்களையும் முடித்து நதிக்கரைக்கு வந்ததும், பலரது அழு குரல் கோரஸா ஒலிப்பதைக் கேட்டார். அப்பொழுது அவரிடம் ஒருவர் “சாமி! இங்கே கிட்டே கரையிலே வீடு கட்டியிருக்கிற ஒரு தம்பதிக்கு பல ஆண்டு கழித்து பிறந்த குழந்தை மாந்த வியாதியால் செத்துப்போயிடுச்சு. இத்தனைக்கும் இந்த குழந்தைக்கு ஜாதகம் கணித்து கொடுத்த ஜோதிடர் ஒருத்தரு, “இந்தக் குழந்தை பூரண ஆயுசு உள்ளது“ எனச் சொல்லிருக்காரு....ம்.. என்ன பண்றது” என வருத்தத்துடன் சொன்னார்.

உடனே ஸ்வாமிகள் குழந்தை இறந்து போன வீட்டிற்கு விரைந்தார். கூடி பலர் அழுது கொண்டிருக்க இல்ல கூடத்தின் நடுவே செத்து விட்டதாக அவர் கேள்விப்பட்ட குழந்தை மாலைகள் போடப்பட்டு கிடத்தப்பட்டு இருந்தது. அதனைச் சற்று நேரம் உற்று நோக்கி பார்த்த சுவாமிகள் அதன் பெற்றோர்களை அழைத்து “கவலை வேண்டாம்,! குழந்தை ஆழ்ந்த மயக்கத்தில் தான் உள்ளது” என ஆறுதல் சொன்னார்.

அதன் பிறகு சுவாமிகள் இறைவனை சில கணங்கள் துதித்து விட்டு,

“நிரவதி கருணார்த்ரை நீ உற்று தாஸேஷ தோனஷ என்று தொடங்கும் ஸ்தோத்திரத்தை இயற்றி பாடிவிட்டு தன் கமண்டலத்திலிருந்து தீர்த்த துளிகளை எடுத்து பூமியில் கிடந்த குழந்தை மீது தெளித்தார்.

அடுத்தக் கணமே, செத்தது என கருதப்பட்ட அக்குழந்தை சட்டென்று எழுந்து சுற்று முற்றும் பார்த்தது. பிறகு தன் தாயிடம் ஓடி அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு விட்டது. இந்த அதிசய நிகழ்வு, அங்கிருந்த அத்தனை தோழர்களுக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கிவிட்டது. பேரானந்தமுற்ற குழந்தையைப் பெற்றவர்கள், ஸ்வாமிகளின் காலில் விழுந்து கண்ணீர் மல்க நமஸ்கரித்து தங்கள் நன்றிகளை பல முறை கூறினார்கள்.

அப்பொழுது திருச்சியை ஆண்டுவந்த நாயக்க வம்ச சிற்றரசன் சுவாமிகளின் அருமை, பெருமைகளை முன்பே கேள்விப்பட்டிருந்தவன் என்பதால் அவரை நாடி, தன் சமஸ்தானத்தில் பதவி ஏற்க கோரினான். ஆனால் அவர் அதனை ஏற்கவில்லை.
இனியும் திருச்சியில் தங்கினால் மீண்டும் அரசன் வந்து சந்தித்து பதவி ஏற்க வற்புறுத்துவான் என்பதை யூகித்தறிந்த சுவாமிகள் மறுநாள் அதிகாலையே எழுந்து தஞ்சையை நோக்கி புறப்பட்டு விட்டார்; தன் குடும்பத்துடன்.

வழியில் உள்ள பல கிராமங்களில் ஓரிரு நாள் தங்கி, ஆங்காங்கே உள்ள குளம் அல்லது ஆற்றில் ஸ்நானம் முடித்து தன் நித்திய கர்மாக்களை செய்து வந்த சுவாமிகள் வழக்கமான உஞ்சவிருத்தி கடமையையும் மேற்கொண்டிருந்தார்.

குடிமக்களுக்கு தினமும் அருளுரைகள் ஆற்றவும் தவறவில்லை. ஒருநாள் வழியில் உள்ள ஒரு சிற்றூரில் சுவாமிகள் தங்கி இருக்கையில் அவருடைய அன்னை இறைவனடி அடைந்து விட்டார்.

அவருடைய அந்திமக் கிரியைகளை முடித்து விட்டு, சில தினங்கள் ஆனவுடன் சமீபத்தில் உள்ள தஞ்சாவூருக்கு பயணமாகிவிட்டார் சுவாமிகள் தன் மனைவியுடன் அக்காலகட்டத்தில் தஞ்சை சமஸ்தானத்தை, ஆண்டுவந்த சிற்றரசன், முன்பே ஐயாவாளின்

அருமை, பெருமைகளை அறிந்திருந்தான். அவ்வூர் எல்லைக்கு வந்தவுடன் அவரை பலமாக உற்சாகமுடன் வரவேற்றான், அரசன்.

பிறகு சுவாமிகள் சென்று தங்கும் ஊர்களுக்கெல்லாம் பின் சென்று அடிக்கடி அவரை தரிசித்து களிப்புற்றான்.

கொஞ்ச காலமானதும் சுவாமிகள் தான் கடைசியாக தங்கியிருந்த சிற்றூரை விட்டுப் புறப்பட்டு, அவர் வந்து சேர்ந்த ஊர் கும்பகோணத்தில் சமீபமாகவிருந்த திருவிசை நல்லூர் சிவத்தலமாகும். அவ்வூரின் செழுமை, வனப்பு, அங்கு ஆலயத்தில் குடிகொண்டிருந்த அருள்மிகு கர்க்கடேஸ்வரரின் தரிசனம் இவை சுவாமிகளை கவர்ந்துவிடவே, அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட வேண்டும் என்ற சிந்தை ஏற்பட்டுவிட்டது அவருக்கு.

திருவிசைநல்லூரில் அக்காலத்தில் எண்ணற்ற, சாஸ்திர அறிவு பெற்றோர், மகாவித்துவான்கள், மொழித் திறமைகள் கொண்டோர் என பல பேர்கள் கொண்ட ஒரு அக்ரஹார தெருவில் உள்ள தனி வீட்டில் குடிபுகுந்தார் சுவாமிகள்.

செழித்தோடும் காவேரி நதியில் அன்றாடம் நீராடல் தொடர, சுவாமிகள் தன் நித்திய அனுஷ்டானக் காரியங்களோடு, உஞ்சவிருத்தி, உபன்யாசப் பணி ஆகியவற்றையும்தவறாமல் செய்து கொண்டு வந்தார். படிப்படியாய் திருவிசைநல்லூர் குடி வாசிகள் ஐயா வாளின் மேன்மைகளை அறிந்து விட்டு அவரை தினசரி வணங்குவதை ஒரு பேறாகக் கருதத் தொடங்கிவிட்டார்கள்.

தஞ்சாவூரை அப்போது ஆண்டு வந்த அரசன் ஷஷாஜி ஐயாவாளைப் பற்றி முன்பே நன்கு அறிந்தவனாகையால் அவரை அடிக்கடி திருவிசைநல்லூர் சென்று தரிசிப்பதோடு மட்டுமல்லாது தீர்வுகாண தன் சிக்கலான விஷயங்களை அவரிடம் தெரிவித்து சரியான முடிவுகளைப் பெற்று திரும்பும் வழக்கமுடையவனாகவும் ஆகிவிட்டான்.

ஷஷாஜி சுவாமிகளிடம் ஒருநாள் "தாங்கள் என் அரண்மனைக்கு எழுந்தருள வேண்டும்" என உருக்கமுடன் விண்ணப்பித்துக் கேட்டுக்கொண்டான். அதனால் அரசனை கௌரவப்படுத்தும் முகமாக சுவாமிகள் தஞ்சை அரண்மனைக்குச் சென்று சில தினங்கள் தங்கினார்.

இதனை தன் பாக்கியமாகவே கருதிகுதுகலபட்டான் ஷஷாஜி.

ஒருநாள் மன்னன் வேண்டிக்கேட்டதின் பேரில் சுவாமிகள் "பத்ம மணி மஞ்சரி" என்ற சமஸ்கிருத நிகண்டு நூலை இயற்றித்தந்ததோடு, அரசன் எதிர்பார்க்காத நிலையில் "ஷஷாஜி ராஜ சரித்திரம்" என்ற அவனுடைய வரலாற்று நூலையும் இயற்றியருளி மன்னன் மகிழ அதனைப் பரிசாக வழங்கினார். பிறகு மன்னனிடம் பிரியாவிடை பெற்று சுவாமிகள் திருவிசை நல்லூருக்கு திரும்பி வந்து விட்டார்.

அவ்வப்பொழுது சுவாமிகள் நிகழ்த்திய பல அதிசய சம்பவங்கள் இன்றும் பெரிதாகப் பேசப்பட்டு வருகிறது.

திருவிசைநல்லூர் தலம் சுவாமிகளுக்கு மிகவும் விருப்பமான ஒன்றாகிவிட்டதால் அவருடைய வாசம் அங்கேயே தொடர்ந்தது.

தினமும் அவரது கடமைகளில் தவறாது இடம் பெற்றது திருவிசைநல்லூர் சமீபமாக உள்ள "மத்யார்ஜுனேஸ்வரம்" என்ற புராணப் பெயரைக் கொண்ட இன்றைய திருவிடைமருதூர் தலம். தினமும் அவ்வூரில் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு மகாலிங்க சுவாமியை வழிபட்டு மன நிறைவு பெற்று வந்தார் சுவாமிகள்.

இடி மின்னல் மழைக் காலங்களிலும் தன்னுடைய அவ்வூர் இறை தரிசனத்தை விட்டுவிடவில்லை அவர். ஒரு நாள் சுவாமிகள் தனது அன்றாட சிவதரிசனக்கடமையை நிறைவேற்ற, தன் இல்லம் விட்டு, திருவிடைமருதூர் செல்ல புறப்பட்டு வரும் வழியில் குறுக்கிடும் காவிரி நதியில் அன்று வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

எப்படி ஆற்றைக்கடந்து மருதூர் ஆலய தரிசனம் பெறுவது என்ற கவலை பற்றி விட்டது அவருக்கு. "ஈசுவரா! இன்றைக்கு ஏன் இப்படி சோதிக்கிறாய்?" என மனதிற்குள் சுவாமிகள் புலம்பினார். இந்தநிலையில் திகைத்து அவர் நின்றிருக்கையில் "அண்ணா!" என்ற குரல் அவரருகே கேட்டதால் திரும்பினார். அங்கே மருதூர் ஆலய, குருக்கள் நின்று கொண்டிருந்தார். "நீங்க ஈசுவர தரிசனம் பெற முடியலையேன்னு கவலை வேண்டாம். இந்தாங்கோ விபூதி பிரசாதம்"! என்று வழங்கினார். சட்டென்று, உடனே வந்தார் விரைந்து சென்று விட்டார்," பரமேஸ்வரா! உன் கருணைக்கு நன்றி! என ஸ்வாமிகள் வாய்விட்டு சொல்லி விட்டு, பெரிய மழை வரும் போல இருந்ததால் தன்

வீட்டிற்கு திரும்பி சென்றுவிட்டார்.

அடுத்த தினம்திருவிடைமருதூர் சிவதரிசனம் பெற ஆற்றின் பக்கம் சுவாமிகள் வந்தபோது வெள்ளம் குறைந்துவிட்டதால், அவர் செல்வது சுலபமாகியிருந்தது.

அச்சிவாலயத்தில், சுவாமிகள் ஈசுவர தரிசனம் முடிந்து அர்த்தமண்டபம் வந்தபோது முதல் நாள் அவருக்கு விபூதி பிரசாதம் தந்த குருக்களைப் பார்த்து விட்டார். நேற்று அவருக்கு நன்றி சொல்லக்கூட முடியாமல் வேகமாக போய்விட்டாரே என்று நினைத்து அவரருகே சென்றார். " குருக்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டு சுவாமிகள்
“எனக்கு நேத்திக்கு பிரசாதம் தந்ததற்கு மிக்க நன்றியும் சந்தோஷமும்”! என மன நிறைவுடன் சொல்ல குருக்கள் திகைத்துப் போனார். ”என்ன அண்ணா சொல்றேள்? நேத்து பெஞ்ச அடைமழைலே, நான் கோவிலை விட்டு எங்குமே போகலையே?” என்று பதிலளித்தார்.
அப்பொழுது தான் தெரிந்தது, அவருக்கு, தன் மனக்குறையை நீக்க இந்த ஸ்ரீ மல்லிகார்ஜுனேஸ்வரரே இந்த குருக்கள் வடிவில் தனக்கு பிரசாதம் அளித்துள்ளார் என, உடனே அங்கேயே இறை கருணையை எண்ணி குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தார் சுவாமிகள்.
பிறகு சமநிலை பெற்று நடந்தவற்றை சுவாமிகள் தன்னிடம் சொன்னவுடன் அந்தக் குருக்களும் பிரமித்துப் போய் விட்டார்.

அடுத்து சுவாமிகளின் வாழ்க்கையில் அரங்கேறிய அற்புத சம்பவமொன்று இக்காலத்தில் ஏட்டளவில் நிற்கும் கங்கை காவிரி இணைப்பு, அவர் காலத்தில் ஈசுவரன் திருவருளால் நடந்துள்ளது தான்!

அன்று காலையில் எழுந்தவுடனேயே மிக பரபரப்பாக பல வேலைகளை தானே முன்னின்று செய்து கொண்டிருந்தார் ஐயாவாள். காரணம் அவருடைய முன்னோர்களில் ஒருவருக்கு சிரார்த்த திதி நாளாக அது இருந்தது.

சிரார்த்தமெனும் திவச சமையல் எல்லாம் முடிந்துவிட்டது. அச் சடங்கின் ஒரு பகுதியாக அதில் பங்கேற்று நடத்த வந்த அந்தணர்களுக்கு ஸ்நானம் செய்ய எண்ணெய், சிகைக்காய் இவற்றை சுவாமிகள் தந்து விட்டதால் அவர்கள் ஆற்றுக்கு சென்று விட்டனர்.
சுவாமிகள் தானும் அந்தணர்கள் திரும்புவதற்குள் குளித்துவிட வேண்டும் என காவிரி ஆற்றுக்கு கிளம்பினார் அவர் இல்லம் விட்டு கொஞ்ச தூரம் நடந்த பிறகு, அத்தெருவில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவன்
”ஐயோ, பசிக்குதே.... யாரேனும் சோறு போடுங்க!” எனச்சொல்லி கதறியவாறே காணப்பட்டான். மிகவும் இரக்க குணம் படைத்த சுவாமிகள் மனம் பதறியவாறே அவனருகே சென்றார். தன் முன் எண்ணப்படி, காவிரி ஆறு செல்வதை ஒத்தி வைத்துவிட்டு, ”வாப்பா, என்னோட அகத்திற்கு, நான் சாதம் போடறேன்” எனக்கூறி, பசியோடு துடிதுடித்தவனை தன்னுடன் அழைத்துச் சென்றார்.

சுவாமிகள் கடும்பசிக்காரனை தன் வீட்டுக் கூடத்தில் உட்கார வைத்து பெரிய வாழை இலை போட்டு, திவசத்திற்கு சமைத்து வைத்திருந்த உணவு வகைகள் அனைத்தையும் தானே பரிமாறி அவனை உண்ணச் செய்தார்.
வந்தவனும் ஆர்வமுடன் இலையில் சுவாமிகள் போட்ட அத்தனையையும் ஒன்று விடாமல் சாப்பிட்டு தீர்த்தான். பிறகு அவன் பலமுறை அவருக்கு நன்றிகள் தெரிவித்து இல்லம் விட்டு வெளியே வந்தான்.

பசிக்காரன் உள்ளே சாப்பிடும்போதே, ஆற்றுக்குக் குளிக்கப் போன அந்தணர்கள் திரும்பி வந்து விட்டதால், நடந்தது அத்தனையும் அவர்களுக்கு தெரிந்து விட்டது. அதனால் மிக சின முற்றார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒருவனுக்கு வீட்டின் உள்ளே உட்கார வைத்து உணவிடுவதும், தவிர சிரார்த்த உணவையே பரிமாறப்பட்டதையும் சாஸ்திரத்திற்கு விரோதமான ஒன்று என அவர்கள் கருதி விட்டனர்.

ஐயாவாள் மீண்டும் காவிரியாறு செல்ல வீட்டிற்கு வெளியே வந்ததும் , வெளியே இருந்த அந்தணர்கள் அவரை ஏளனமாக பார்த்து ”என்ன ஐயாவாள், இப்படி சிரார்த்த சாப்பாட்டை ஒரு தாழ்த்தப்பட்டவனுக்கு உமது அகத்துக்குள் பரிமாறிவிட்டு எங்களையும், நம் தர்மத்தையும் இழிவுபடுத்தலாமா?” எனக் கோபத்துடன் கேட்டார்கள்.
”சாஸ்திரிகளே! மன்னிக்க வேண்டும். இன்றைய திவச காரியத்திற்கு மீண்டும் வேறு சமையல்

செய்து, சடங்குகள் முடிந்ததும் சாப்பிடச் செய்யலாமென்று உள்ளேன்" என பணிவுடன் கூறினார். அதனை ஏற்காத அந்தணர்கள் பிடிவாதமாக " ஓய்! நீர் செய்த இந்த தவறான காரியத்திற்காக உம்மை இக்கணம் முதல் நம் அந்தண ஜாதியை விட்டு விலக்கி விட்டோம்" என கோரஸாக ஒரே குரலில் கூறினார்கள். உடனே அவர்கள் அங்கிருந்து விரைந்தும் சென்று விட்டார்கள்

அதனால் மனம் தளர்ச்சியுறாத சுவாமிகள் குளித்துவிட்டு வந்து தானே மீண்டும் சிரார்த்த உணவுகளை தயாரித்து விட்டு, இதர பிதுர்க்கடன் முறைகளையும் முடித்தார். திவசத்திற்கு பித்ருக்கள், விஷ்வ தேவர், மகாவிஷ்ணு ஆகியோர் எழுந்தருளி உணவு உண்பதாக ஐதிகம் உள்ளதால், அப்படியே பாவித்து மூன்று இலைகளிலும் பரிமாறி விட்டார்.

அப்பொழுது நிஜமாகவே மேலே கூறிய அவர்கள் அங்கே அருபமாகவே வந்து திவச உணவை சாப்பிட்டு, ஸ்வாமிகளுக்கு நல்லாசிகள் வழங்கிவிட்டு மனநிறைவுடன் மேலுலகம் திரும்பிவிட்டார்கள் என்றும் செவிவழிச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

சில தினங்கள் கழித்து ஸ்வாமிகள் செய்யவேண்டிய வேறொரு முன்னோர் ஒருவருக்கான திவச திதி வந்தது. அப்போது சம்பந்தப்பட்ட முன் திதிக்கு அழைக்கப்பட்ட அந்தணர்களே நடத்திக் கொடுக்க அவர்களை மிக மரியாதையுடன் கேட்டார், சுவாமிகள்.

அந்த அந்தணர்களோ முதலில் வரவே மாட்டோம் என தீர்மானமாக தங்கள் முடிவை கூறிவிட்டார்கள். பிறகு சுவாமிகள் மீண்டும் அவர் சிரார்த்தத்திற்கு கேட்டுக்கொள்ளவதை தவிர்க்கும் எண்ணமுடன் "ஓய்! நீங்கள் வடக்கே காசியில் ஓடும் கங்கை நதியில் ஸ்நானம் புரிந்து, உம்மை சுத்தம் செய்து கொண்டு திரும்பி வந்தால் மட்டுமே, சிரார்த்தத்துக்கு வருவதைப் பற்றி யோசிப்போம்" என நிர்த்தாட்சண்யமாக கூறிவிட்டார்கள்.

சற்று யோசித்த ஸ்வாமிகள் நான் அந்த கங்கா நதியையே இவ்வூருக்கு வரவழைத்து, ஸ்நானம் செய்து விட்டால், உங்களுக்கு பரவாயில்லையா? "எனக் கேட்டார்... அதற்கு சாஸ்திரிகள் சில நிமிடங்கள் தங்களுக்குள் ரகசியமாய் கிசுகிசுத்து பேசிவிட்டு, இவராவது, கங்கா நதியை இங்கே வரவழைப்பதாவது என்று முடிவு செய்து கொண்டார்கள். அவர்களில் ஒருவர்" எங்களுக்கு இதில் ஆட்சேபனையே இல்லை. முயற்சியும்!" என மிக எகத்தாளமாக பதில் சொன்னார்கள்.

உடனே ஸ்வாமிகள் வந்த அந்தணர்களை தன் வீட்டுக் கிணறு பக்கம் அழைத்துச் சென்றார். இந்த விஷயம் கொஞ்சம் கொஞ்சமாய் திருவிசைநல்லூர் கிராமவாசிகளையும் எட்டி விட்டதால் அவர்களும் இதைக்காண சேர்ந்துவிட்டனர்.

அப்பொழுது சுவாமிகள், வீட்டுக்கிணறு சமீபம் சென்று அதனைப் பார்த்தவாறே "கங்காஷ்டகம்" என்ற ஸ்லோகங்களை உரத்த குரலில் இயற்றி துதிக்கத் தொடங்கினார். அவர் பாடி முடித்த அடுத்தக்கணமே அனைவரும் மெய்சிலிர்த்து வியக்கும் வகையில், அந்தக் கிணற்றில் இருந்து குபுகுபுவென கங்கை நீர் பெருகி வந்து கொண்டே இருந்து அதன் வெளியேயும் கொட்டத் தொடங்கி விட்டது. சிறு துளி ஒன்று சேர்ந்து பெருவெள்ளமாகி, ஊரில் கங்கா பிரவாகமெடுத்து ஓடத் தொடங்கி விட்டாள்.

முதலில் அக்ரஹார வீதியில் சேர்ந்த பெருவெள்ளம் அதிகமாகி ஓடி அவ்வூர் அத்தனை வீடு, குடிசைகள் மூழ்கும் நிலைக்குப் போய்க் கொண்டிருந்தது. தவித்துப் போன ஜனங்கள் ஐயா வாளிடம், "சாமி! சாமி!! எங்களை காப்பாத்துங்க!" என கதறி வேண்டினர்.

தங்கள் முகத்தில் ஈயாடாமல் பிராமணர்களும் அக்காட்சியை கங்கை நீரால், அவர்கள் சூழப்பட்ட நிலையில் காணப்பட்டனர். அவர்களும் கைகூப்பி சுவாமிகளை வேண்டிக் கேட்டுக் கொண்டனர்.

அப்போது சுவாமிகள் அந்தப் பெருகி வந்த கங்கை நீரில் ஸ்நானம் செய்து விட்டு, ஊர்க்காரர்களிடம் "இந்தக் கிடைத்தற்கரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் அனைவரும் இதில் குளித்து புனிதம் பெறுக!" என ஆக்நையிட்டார். அப்படியே அனைவரும் அதனை ஏற்று செயல்பட்டனர். இதில் சிரார்த்தம் செய்ய வந்த அந்தணர்களும் அடக்கம்.

பிறகு சுவாமிகள் இரக்கமுற்று, "பகீரத மனோ பீஷ்ட" என்று ஆரம்பமாகும் ஸ்லோகத்தை இயற்றி பாடி அருள, உடனே கங்கை நீர் சரசரவென பின்வாங்கி அவர் வீட்டு கிணற்றுக்கு உள்ளேயே அடங்கிப்போன அதிசயமும் நடந்தது. அந்தப் புண்ணிய சம்பவம் நடைபெற்றது 1730 ம் ஆண்டின் கார்த்திகை அமாவாசை கூடிய புனித நாள் ஆகும்.

அன்றுதான் உலகமே அறிந்தது ஐயாவாள் சுவாமிகளின் மகத்தான அருமையை! அதன்பின், அவர் வீட்டு சிரார்த்தத்தை நடத்த வந்த

அந்தணர்கள் மிக பயபக்தியுடன் செய்து முடித்தனர்.

இச்சம்பவம் நடந்த முடிந்து சில நாட்கள் கடந்தவுடன் ஐயாவாளின் சிந்தை சிவனடியை விரைவில் சேர்ந்து விடவேண்டும் என்பதை நோக்கியே சென்று கொண்டிருந்தது. ஒரு நாள் தம் நித்திய அனுஷ்டானங்களை முடித்து விட்டு ஐயாவாள், திருவிடைமருதூர் சிவாலயத்தை நோக்கிச் சென்றார்.

அன்று அவரது முகம் அபார ஒளியுடன் காணப்பட்டது. அருள்மிகு மல்லிகார்ஜுனேஸ்வரரின் திருச்சந்நிதி அருகே நின்று ஐயாவாள் "ஸம்ஸாரக்யே" எனத் தொடங்கும் ஸ்லோகமுதல் வரியை இயற்றி பாடத்தொடர்கையிலேயே குமுறிக் குமுறி அழத் தொடங்கி விட்டார்.

அச்சப்தம் பெரிதாக ஆலயத்தில் ஒலிக்கத் தொடங்கி விட்டது. அதனால் என்னவோ ஏதோ எனப்பதறி ஆலய அர்ச்சகர்களும், தரிசனம் புரிய வந்த பக்தர்களும் ஐயாவாள் நின்று கொண்டிருந்த "ஈசுவர சன்னிதியில் கூடிவிட்டார்கள்.

அச்சமயம், கதறிக் கொண்டிருந்த ஐயாவாள் சடாரென கருவறைக்குள் நுழைந்து சிவலிங்கம் பக்கம் ஓடி விட்டார். அவரை அப்போது தடுக்க வந்தவர்கள் முயற்சி பலிக்கவில்லை. கருவறையில் உள்ள இறைவனை ஐயாவாள் தொட்ட மாத்திரத்தில் அவர் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் சிவலிங்கத்திற்குள் ஐக்கியமாகிப் போனார்!

அவரை சிவபிரான் ஏற்றுக்கொண்ட வகையில், சிவலிங்கம் ஒளிர் விட்டு ஒருகணம் பிரகாசித்து, ஜோதி ஒளிமயமானது. அனைவரும் மெய்சிலிர்ப்புடன் "ஓம் நமச்சிவாயம், ஹரஹர சங்கர" என பக்தியுடன் ஓலமிட்டனர்.

அந்த அற்புத நிகழ்ச்சி அரங்கேறிய ஆண்டுமுதல், ஒவ்வொரு வருட கார்த்திகை கூடிய அம்மாவாசை நாளில் திருவிசைநல்லூர் ஐயா வாளின் வீட்டுக் கிணற்றில் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஸ்னானம் புரிந்து புனித மடையும் வகையில் கங்கை நதி புகுந்து பெருகி, கிணற்றின் மேல் பகுதி முழுவதும் பொங்கி வந்து கொண்டே இருக்கும்!

நிகழும் பல்வ ஆண்டில் இடம்பெறும் கார்த்திகை கூடிய அமாவாசை புண்ணிய தினம் 18 ம் நாள் ஆக, அதாவது 2021ம் ஆண்டின் டிசம்பர் 4ம் தேதியன்று காவிரிக் கரையில் இருக்கும் திருவிசைநல்லூர் ஐயாவாள் சுவாமிகளின் வீட்டுக் கிணற்றில், கங்காநதி பிரவேசித்து அதனை இன்றும் புனிதம் பெறச் செய்யும்!

இந்த பாக்கியத்தை பெறும் பக்தர்களில் நாமும் ஒருவராக இருக்கலாமே!

ஓம் நமச்சிவாய!




KABA SURA
KUDINEER

15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties

Call: 88702 88701

# மெய்ப்பொருள் நாயனார்

~ ரா.பன்னீர் செல்வம்

திருக்கோவிலூர் அரண்மனை மாளிகை! இந்த மாளிகையின் பக்கம் வருகின்ற எல்லோருக்கும் ஒரு ஐயம் வருவதுண்டு! இது, திருக்கோவிலூரை ஆளும் மன்னன் உறைகின்ற அரண்மனையா? அன்றி... அந்த ஆண்டவனே உறைகின்ற ஆலயமா? இந்தக் கேள்வி எழாத மனங்கள் எதுவுமே இருக்க முடியாது! அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை! அரண்மனை என்றால் காவலர்கள், வாயிற்காப்போன் என சிப்பாய்களின் முரட்டு உருவங்கள், அவர்கள் கையில் மின்னுகின்ற, கூர்மையான வாள், வேல் போன்ற ஆயுதங்கள் இருப்பதுதானே வழக்கம்!? ஆனால், இந்த மாளிகையிலோ.... அரண்மனைக் காவலர்கள், சிவச்சின்னங்களான ருத்ராட்சம், நெற்றி நிறைய விபூதி தரித்து, கருணை மிகுந்த கண்களோடு காட்சியளித்தனர். அதற்காக, இவர்களை பண்டாரங்கள் என பரிகசிக்க முடியாது! பகையை வெல்வதில் காலனைக் காட்டிலும் கொடியவர்கள் தான்! ஆனால், திருக்கோவிலூரை பகை நெருங்காது! ஏனென்றால், இந்த நாட்டின் மன்னன் மட்டுமல்ல; மன்னன் வழி நிற்கும் குடிகளும் அந்த மகேசனின் அடியவர்கள். எனவே, திருக்கோவிலூரின் அரணாக அந்த ஆண்டவனே இருக்கிறான் என்பது அனைவருக்குமே தெரியும்.

அந்த பரமனின் மீது பாரத்தைப் போட்டு விட்டு, நாட்டை ஆளுகின்றார், பரம பக்தரான, சிவனடியார் அரசன் மெய்ப்பொருள்!

அரசன் என்ற மமதை சிறிதும் இல்லாமல் ஆண்டவருக்கு அஞ்சி, நேர்மையோடு நல்லாட்சி செய்து வரும் மெய்ப்பொருளார் அவர்கள், சிவநெறி சிந்தனை மிக்கவர். தன் நாட்டு மக்கள் அனைவரும் தர்ம நெறிகளும் சைவ சிந்தனைகளும் கொண்டு விளங்க வேண்டும் என்ற அரசனின் எண்ணத்திற்கேற்ப மக்கள் நல்வழியில் சென்றனர்! நாடும் நலம் பெற்று விளங்கியது! சிவ சிந்தனையோடு நாடாளும் மன்னன்! அந்த மன்னனின் வழி நடக்கும் மக்கள்! மகேசனின் மனங்கவர் நாடாக, திருக்கோவிலூர் திகழ்ந்தது! இந்த மண்ணை வளைக்க வந்த மாற்றார், மண்ணைக் கவ்வினர்! பக்தியில் சிறந்த மன்னன், மெய்ப்பொருளாரின் படைவீரம் சற்றும் சளைத்ததல்ல என்பதை மற்ற நாட்டு மன்னர்களும் அறிந்திருந்தனர்.

இந்த நாட்டின் அமைதியிலும் முன்னேற்றத்திலும் பொறாமை கொண்டு படையெடுத்து வந்த பகை நாட்டு மன்னர்கள், இறைவனின் கருணை முழுமையாக இருந்த மெய்ப்பொருளாரிடம் தோற்று ஓடினர்!

பக்தியும் பக்தியின் பாற்பட்ட வீரமும் இரு கண்களாய் விளங்கிய மெய்ப் பொருளாரை வெல்வதற்கு இயலாமல் அடங்கிப் போயினர் அவரது எதிரிகள்!

அரசன் மெய்ப்பொருளாரைப் பொறுத்தவரையில் மக்கள் அமைதியாய் வாழ வேண்டும்; அறநெறி தழைக்க வேண்டும்! அன்பு தோய்ந்த சிவநெறி சிறக்க வேண்டும் என்பதையே லட்சியமாய்க் கொண்டு நல்லாட்சி செய்து வந்தார்.

நல்லதை ஏற்கும் மனப்பக்குவம் எத்தனை பேருக்கு இருக்கும்?! நல்லோர்க்கு தீங்கு செய்ய நாலு பேர் இருப்பார்கள் அல்லவா?! இதோ.... திருக்கோவிலூர் மன்னன் மெய்ப்பொருளார்க்கு எதிராக, சூழ்ச்சி வலைபின்ன ஒரு ஆலோசனை நடந்தது!.... ஆம்!...

திருக்கோவிலூரின் பக்கத்து நாடு! ஓரிரண்டு முறை, திருக்கோவிலூர் மீது படை நடத்தி வந்து, படுதோல்வியோடு திரும்பிய சில குறுநில மன்னர்கள் முத்தநாதன் தலைமையில் ஒன்று கூடியிருந்தனர்! பத்து, பன்னிரண்டு குறுநில மன்னர்கள், மன்னன் முத்தநாதன் அரண்மனையிலே கூடி, ஆலோசனை நடத்தினர். நல்லதை விவாதித்தால் ஆலோசனை எனலாம். இவர்கள் நடத்தியதோ சதியாலோசனை!



இது சதி தான்! படைகொண்டு இனிமேல் மெய்ப்பொருளாரை வெல்லமுடியாது! இதற்கு மாற்று வழி என்ன உண்டு என்பதைப் பற்றி சிவந்த கண்களோடு, சீறும் குருரத்தோடு ஒவ்வொருவரும் தங்கள் எண்ணத்தைக் கூறினர்!
“என் படைகளை எவ்வளவு சாமர்த்தியமாக நடத்தினேன் தெரியுமா? ஒரு சில மணி நேரத்திலேயே சுண்டைக்காயை நசுக்குவது போல் நசுக்கி விட்டான் என் படைகளை!” என்றான் ஒருவன்.

“இத்தனைக்கும் அவ்வளவு வலுவான படை பலம் ஏதும் இல்லை மெய்ப்பொருளிடம்?”- வேறொருவன்.
“உண்மை தான்! வலுவான படைபலம் இல்லை! ஆனால், அவனை வெற்றி கொள்ள முடியவில்லையே.... ஏன்?...” இப்படி ஒருவன் அங்கலாய்க்க,

மற்றொரு மன்னன், “எப்படியும் அவனைத் திணறடிக்க வேண்டும் என்றே நாங்கள் மூன்று பேரும் இணைந்து, முப்புறத் தாக்குதலை நடத்தினோம்! எப்புறமும் அவன் அற்புதங்கள் நிகழ்த்தினான்! தோல்வி, தோல்வி! படு தோல்வியோடு திரும்பினோம்”! இப்படி ஒரு மன்னன் வேதனையோடு சொல்ல,

அவன் பக்கத்தில் இருந்த ஒருவன், “அதிலும் ஒரு நல்லது நடந்தது!” என்றான்!

அது என்ன? “என்றான் மற்றொருவன்! உடனே, அவன்,” முப்புறமும் நாங்கள் நடத்திய தாக்குதலில் என்னை சிறைப் பிடித்து விட்டான், மெய்ப்பொருள்! நான் வெலவெலத்துப் போனேன்! என்ன சித்திரவதை செய்யப் போகிறானோ? என நடுங்கினேன். ஆனால், பெருந்தன்மையோடு என்னை மன்னித்து களத்திலேயே விடுவித்து விட்டான்! அப்போது தான் எனக்கு போன உயிர் மீண்டும் வந்தது! ஒரே ஓட்டமாய் நாடு வந்து சேர்ந்தேன்! “என்று அவன் சொல்லவும் எல்லோரும் எக்காளமிட்டு சிரித்தனர்!” தொடை நடுங்கி ஓடி வந்ததை என்ன ஒரு தோரணையோடு சொல்கிறார் பாருங்கள்”, என்றான் ஒரு மன்னன்!
“மாற்றானிடம் சிறைப்பட்டால் மானம் போய்விடும் அல்லவா?” என்றான் அவன்!
”அதனால்?..... உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடி வந்தீரா?... என ஒருவன் குத்தலாய் கேட்க, அனைவரும் சிரித்தனர்!

முதல் முறையாக வாய் திறந்தான், மன்னன் முத்தநாதன்! “சிரித்தது போதும்; நிறுத்துங்கள்! அவனிடம் பட்ட அவமானத்தை பட்டவர்த்தனமாக சொல்லி, அவனுக்கு பாராட்டுப் பத்திரம் வாசித்தது போதும்! இத்தனை தோல்விகளுக்கும் அவமானங்களுக்கும் காரணம் என்ன? எந்த புயலாலும்அந்த ஆலமரத்தை

அசைக்க முடியவில்லையே, அது ஏன்?" என கோபமாக கேட்டான்!

ஒருவன், "நானும் எவ்வளவோ முயன்றேன்... படையெடுத்தேன்.... படுதோல்வியே பரிசாகக் கிடைத்தது!" என வேதனையோடு சொன்னான்! "அதற்குத்தான் காரணம் என்ன?... அதை சொல்லுங்கள்! வீண்பேச்சு வேண்டாம்", என கர்ஜித்தான் முத்தநாதன்! "அவன் அடைகின்ற வெற்றிக்குக் காரணம், அவனது மறத்திலோ, படை நடத்தும் திறத்திலோ இல்லை! பரமனின் வரத்திலே உள்ளது!" பற்களைக் கடித்தபடி சொன்னான், ஒரு மன்னன்!

இன்னொருவன், "பரமனின் வரமா?.. எப்போது? எப்படி வரம் கொடுத்தார் பரமேஸ்வரன்!?" என்று ஏளனமாக கேட்டான்! "அமைதியாகக் கேளுங்கள்! மெய்ப்பொருள் வெறும் மன்னன் மட்டுமல்ல; சிறந்த பக்திமான்! அவனது செயல்கள் எல்லாம் சிவனை மகிழ்ச்சி அடையச் செய்கின்றன. அதனால், அவன் கேளாமலேயே வரங்களை வாரிக்கொடுப்பான் அந்த இறைவன்!" என்றான்!
"நாமும் சிவனைத் தானே வணங்குகின்றோம்!" அவனுக்கு வெற்றியைக் கொடுக்கும் இறைவன் நமக்குக் கொடுக்க மாட்டானா? "சினமுடன் ஒருவன் கேட்க,"
வேளைக்கு ஆலயம் சென்று, வேண்டியவற்றைக் கேட்டு நிற்கிறோம் நாம்! ஆனால், மெய்ப்பொருளோ தனக்கென்று ஏதும் கேட்பதில்லை. அதோடு, சிவனடியார் எவரைக் கண்டாலும் சிவனையே கண்டது போல் உருகுகின்றான். நமசிவாய என சொல்பவர்க்கு அள்ளி வழங்குகின்றான்! சிவசிந்தனையிலேயே முக்காலமும் திளைக்கின்றான்," எனக் கூறினான். முத்தநாதன்,
"அப்படியென்றால்... வேல் கொண்டு வெல்லமுடியாத அவனை விபூதியால் தான் வெல்ல வேண்டுமா?" என குரூரப் புன்னகை புரிந்தான்!
இன்னொருவன், " நன்றாக சொன்னீர்கள்! சிவனடியார் எவர் வந்தாலும் சிறு குழந்தையாய் மாறி விடுவான் அந்த மெய்ப்பொருள்!.. முத்த நாதரே, சிவனடியார் உருவில் சென்றால் அவன் சிரத்தை அறுத்து விடலாம்! பிறகு..... திருக்கோவிலூரே நமக்கு அடிமை!" என வெடியாய் சிரித்தான்!
"போதும், இது போதும்! அந்த மெய்ப்பொருளை பொய்ப் பொருளாய் ஆக்கி அடக்கம் செய்கிறேன்!

சிப்பாயாக சென்றால் போர்முரசம் ஒலிக்க வேண்டும்! சிவனடியாராக சென்றால் சங்கொலி முழங்க வேண்டும்! செல்கிறேன்! நானே சிவனடியாராக செல்கிறேன்!

காவி உடையிலே கரு நாகமாய் செல்கிறேன்! ஆண்டிக் கோலத்திலே ஆலகால விஷமாய் செல்கிறேன்! படைகொண்டு வெல்லமுடியாத அவனை பக்தியால் வெல்லுகிறேன்... அல்ல அல்ல கொல்லுகிறேன்! " என இடியாய் நகைத்தான்!

ஏற்பாடுகள் நடந்தன! சில மணி நேரத்தில் அடையாளம் தெரியாதபடி ஆளே மாறிப் போனான் முத்தநாதன்! காவி உடை! பொய்த் தாடி, ஜடாமுடி, முகத்தை மூடிய திருநீறு, நிறைய ஓலைச் சுவடிகளை ஒரு காவித் துணியில் கட்டி, அதைக் கக்கத்தில் வைத்திருந்தான்! அந்த ஓலைச் சுவடிகளுக்கிடையே மெய்ப் பொருளின் உயிர் குடிக்கக் காத்திருந்தது ஒரு கூரிய வாள்! முத்தநாதன் புறப்பட்டான்! "ஓம் நமச்சிவாய", என்ற மந்திரச்சொல்,! அந்த சூழ்ச்சிக்காரன் வாயிலிருந்து உதிர்ந்தது!

நீறு பூசிய நெற்றியின் புருவ மத்தியில் சிவஜோதி பிரகாசிக்க, பூஜையில் அமர்ந்திருந்தான் மெய்ப்பொருள்! ஜோதி தரிசன சுகம் கண்டு லயித்து, கண்களைத் திறந்து, கைகளைக் கூப்பி, வணங்கி விட்டு எழுந்தான்! அவனுடைய மேல்துண்டு பட்டு, அருகிலே இருந்த விபூதிக் கிண்ணம் சாய்ந்து, தரையில் சிதறியது விபூதி!

பக்தியோடு அதனை ஒற்றி எடுத்துக் கொண்டிருக்க, பூஜையறை வாயிலில் காவலன் வந்து நின்று, "பிரபு.... தங்களைக் காண வேண்டும் என்று சிவனடியார் ஒருவர் காத்திருக்கிறார்!" என வணங்கி நின்றான்.
"காத்திருக்கிறாரா? எங்கே?".. என பதட்டமுடன் ஓடினார். மாளிகையின் கூடத்தில் நின்றிருந்த வேடதாரி முத்தநாதனை பணிவுடன் வணங்கி அழைத்து வந்து, உரிய ஆசனத்தில் அமரச் செய்தார்!

மெய்ப்பொருள் பணிவுடன் வணங்கி, சிவனடியார் வேடத்தில் இருந்த முத்தநாதனிடம், "சுவாமி... தங்களின் வருகையால் என் மாளிகை புனிதமானது! உணவருந்திவிட்டு, சிரமப் பரிகாரம் செய்து கொள்ளுங்கள்," என கனிவுடன் நிற்க,

சிவனடியார் வேடத்தில் இருந்த முத்தநாதன், சற்றே புன்னகைத்து, "மன்னா! என்னைப் போன்ற அடியார்களின் நலம் காக்கும் மன்னன் என்று உன்னைப் பற்றி நான் நன்கறிவேன்! ஆனால், இன்று உன் மாளிகை நாடி நான் வந்திருப்பது, உனது உபசாரங்களை ஏற்றுக் கொள்ள மட்டுமல்ல! அதனினும் ஓர் உன்னத நோக்கம் உண்டு! அது ஈசன் எனக்கிட்ட கட்டளை! அதை நிறைவேற்றவே இங்கு வந்தேன், "என்றான்.
ஆச்சர்யமடைந்த மெய்ப்பொருள்," சொல்லுங்கள் சுவாமி! எதுவாயினும் சிரமேற்கொள்கிறேன்", என பணிந்து நிற்க, முத்தநாதன்,
"எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் மன்னா! இறைவன் ஈசன், தானே எழுதிய ஆகம விதிகள் அடங்கிய சுவடிகள் எனக்குக் கிடைத்துள்ளன. அவற்றை நான் வாசிக்க நீ கேட்க வேண்டும்; இது இறைவனின் விருப்பம்!" என புன்னகைத்தான்!
பெருமகிழ்ச்சியடைந்த மெய்ப்பொருள், "என்ன பாக்கியம் செய்தேன் நான்...."சுவாமி! தாங்கள் வாசித்தால், என் செவி குளிர கேட்க சித்தமாய் இருக்கிறேன்", என பணிந்து, வணங்கி நிற்க...

பொங்கிவரும் சீற்றத்தை பொய்த் தாடியால் மறைத்தபடி ஓலைச்சுவடியை சுற்றியிருந்த காவித் துணியை அகற்றி, சுவடிகளுக்கிடையே மின்னிக் கொண்டிருந்த வாளை உருவிய முத்தநாதன், வணங்கி நின்ற மெய்ப்பொருளாரின் முதுகில் ஓங்கி குத்தினான்!
"ஆ....." சிவசிவ... நமசிவய" என்ற சத்தத்துடன் சிவன் அடியார் கோலத்தில் நின்றிருந்த முத்தநாதனின் முகத்தை பார்த்தபடி கீழே விழுந்தான் மெய்ப்பொருள்! கொடூரமாக சிரித்தபடி நின்றான், வேடதாரி முத்தநாதன்!

சத்தம் கேட்டு ஓடி வந்த காவலர்கள், உருவிய வாளுடன் நிற்கும் சிவனடியாரையும் ரத்த வெள்ளத்தில் விழுந்து கிடக்கும் மன்னன் மெய்ப் பொருளையும் பார்த்து, ஆவேசத்துடன் வாளை ஓங்கியபடி முத்தநாதனை நோக்கி ஓடிவந்தனர்!
வேடதாரியின் தலையைக் கொய்ய, வாளை ஓங்கினர்! "நிறுத்துங்கள்"... என்ற குரல் அவர்களை தடுத்தது! ரத்த வெள்ளத்தில், வேதனை தாளாமல் துடித்த மெய்ப்பொருள், "வேண்டாம்; அவரை ஒன்றும் செய்யாதீர்கள்" அவர் சிவனடியார்! என முனங்கி சொல்ல, ஓடோடி வந்த ஒற்றன், "மன்னா.... இவர் அண்டை நாட்டு மன்னன் முத்தநாதன்!" என பதட்டமாய் சொன்னான்!
"பாய வந்தாலும் பசுவைக் கொல்வது தவறு! அவன் வேடம் புனைந்தாலும்... அது சிவனடியார் வேடம்! எனவே அவரை எந்த சங்கடமும் ஏற்படாமல் நாட்டு எல்லை வரை பாதுகாப்பாக விட்டு விடுங்கள்! யாரும் எதுவும் செய்யக்கூடாது!", என மரண வலியோடு சொல்ல.... சிவனடியார் வேடத்தில் நின்ற முத்தநாதன் என்ன சொல்வதென்று தெரியாமல் தவிக்க, அவரை வீரர்கள் அழைத்துச் சென்றனர்.

சிறிது நேரத்தில், முத்தநாதனை எல்லை வரை சென்று, விட்டு வந்த செய்தியை ஒருவன் சொல்ல.... மெய்ப் பொருளின் உயிர் பிரிந்தது!
தன் உயிர் போகும் அளவுக்கு துன்பம் தந்தவன் சிவனடியார் வேடத்தில் இருந்ததால் அவனைக் கொல்வது பாவச் செயல் என நினைத்த மெய்ப்பொருளின் பக்தியை மெச்சி முக்தியளித்த சிவபெருமான், அவருக்கு நாயனார் என்னும் உயர்நிலை அளித்து மெய்ப்பொருள் நாயனார் என்றாக்கி, அனைவரும் வணங்கிடச்செய்தார்!




TURMERIC
& BLACK PEPPER
HI-HEALTH FORMULA
Navel Chakra & Detoxifier
Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain, heart and liver cells from ageing process
Call: 88702 88701

# வீட்டிலேயே செய்யக்கூடிய எளிமையான லால் கிதாப் பரிகாரங்கள்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

லால் கிதாப் என்பது உருது மொழியில் இயற்றப்பட்ட ஜோதிட நூல் ஆகும். இந்த புத்தகம் தமிழில் சிகப்பு புத்தகம் என்று அழைக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் செய்வதற்கு எளிமையானதும் அதிக செலவுகள் அற்றதும் அதே நேரத்தில் ஆற்றல் மிக்க வீட்டு பரிகாரங்கள் பரிந்துரைக்க பட்டுள்ளது. ஆயிரக்கனக்கான ஜோதிடப் பரிகாரங்கள் கொடுக்கப்பட்டு இருந்தாலும் நாம் அன்றாடம் செய்துகொள்ளக்கூடிய நமது வாழ்க்கையை மேம்படுத்தும் பரிகாரங்களை கீழே காணலாம்.

அனைத்து விதமான தடைகளை போக்கும் பரிகாரங்கள்:

1. தினமும் காலை எழுந்தவுடன் நமது உள்ளங்கை பாதங்களை பார்த்துவர நமது அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் தடைகளை தகர்க்க முடியும். எப்படி என்றால் நமது உள்ளங்கையில் அனைத்து தெய்வங்களும் வாசம் செய்கின்றனர்.
2. தினமும் ஹனுமனை கும்பிட்டு வருவதும் தடைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளும்.
3. நாம் குளித்து முடித்தவுடன் சூரிய பகவானுக்கு சர்க்கரை கலந்த நீரை நைய்வேத்தியமாக படைத்து. சூரிய காயத்ரி மந்திரத்தை 31 முறை ஜபித்து வர அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.
4. எழுமிச்சம் பழத்தை நான்கு சம பாகமாக நறுக்கி பின் நான்கு கிராம்பை எடுத்து நறுக்கி வைத்திருக்கும் நான்கு எழுமிச்சம் பழத்தில் நான்கு கிராம்பை நனைத்து வைத்து அதன் பின் உலர்த்தி நாம் வீட்டை விட்டு கிளம்பும் போது நம்முடன் எடுத்து செல்வது தடைகளை தகர்க்கும் ஒரு முக்கிய பரிகாரம் ஆகும்.



# கடன் தீர்க்கும் சுதர்சன சக்கரமும் கோயில் வழிபாடும்

~ ரா.பன்னீர் செல்வம்

சுதர்சன சக்கரத்தை ஒரு ஆச்சாரியர் மூலம் எழுதி வாங்கி கொள்ள வேண்டும். சக்கரம் செம்பு, வெள்ளி ( அ) தங்க தகடுகளில் எழுதலாம்.
புதன்கிழமையும் புதனின் நசேத்திரமும் (ஆயில்யம், கேட்டை, ரேவதி) இவை இரண்டும் சேர்ந்து வரும் நாளில் பிரம்ம முகூர்த்தத்தில் வெண்துளசி இலைசாறு ஒருதுளி சக்கரம் எழுதிய தகட்டில் பூச வேண்டும். இந்த சக்கரத்தை பூஜை அறையில் வைத்து வழிபட வேண்டும். தினமும் தூபம் போடும் போது துளசி பொடி சாம்பிராணியுடன் சேர்த்து போட வேண்டும். இந்த தூப புகை சக்கரத்தில் படும் படி காட்ட வேண்டும். இந்த வழிபாட்டு முறை கடனில் இருந்து விடுபடவும், நோய் திரவும், வழக்கில் வெற்றி அடையவும் பயன்படுத்தலாம். சக்கர வழிபாடு ஆரம்பித்த பின்பு உங்களுடைய ஜென்ம நட்சத்திரத்திற்கு கும்பகோணத்திற்கு அருகில் திருச்சேறை என்ற ஊரிலுள்ள ஸ்ரீ சர பரமேஸ்வரர் ஆலயத்திற்கு சென்று வழிபட்டு வரவும்.

கோயிலில் அர்ச்சனை செய்த பிறகு சில மணி நேரங்கள் கோயில் வளாகத்தில் அமர்ந்து மனதார பிரார்த்தனை செய்ய வேண்டும். இவைகளை செய்தால் தங்களின் கடன் குறை ஆரம்பிக்கும் மற்றும் நல்ல வழி பிறக்கும்.



# தூய பக்தியின் உச்சமே ஸ்ரீ ஆண்டாள்...

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை நாச்சியார் திருமொழி என்கிற இரு பிரபந்தங்கள்.

ஆண்டாள் தன் தோழிகளை, ஆழ்ந்த பக்தி கொண்ட ஆழ்வார்களாகவே பார்த்தாள்.

தனது தோழிகளான ஆழ்வார்களை தனது திருப்பாவை பாசுரத்தால் ஒவ்வொரு ஆழ்வாரை எழுப்புகிறார் என்பதே நிதர்சனம்!

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே! - என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளியது போன்று

கண்ணபிரானை, காதலாகி கசிந்துருகி, தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்று மனம் மொழி மெய் ஒன்றுபட பூங்கோதையான ஆண்டாள் போற்றுகின்றாள்.

கண்ணனை பிரியமுடன், சிங்கம் என்று முதல் பாசுரத்திலேயே அழைக்கின்றாள். மார்கழித்திங்கள் எனத் தொடங்கும் முதல் பாசுரத்தில் யசோதை இளம் சிங்கம் என்ற அழகான வரியை எழுதுகிறார் ஸ்ரீ ஆண்டாள்!

மாரி மலை முழஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா உன்
கோவில் நின்று இங்ஙனே போந்தருளிக்
கோப்புடைய
சீரிய சிங்கானத்திலிருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளாலோர் எம்பாவாய்

என்ற பாசுரத்தில்,

கண்ணன் கம்பீரமாக எழுந்தருளும் திருக்கோலத்தை ஆண்டாள் அழகாக தன் திருப்பாவை பாசுரத்தில் படம் பிடிக்கின்றாள். கண்ணனின் அற்புதங்களை மிகச்சிறப்பாக பட்டியல் இடுகின்றாள் ஸ்ரீ ஆண்டாள்.

அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி சென்றங்குத" தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி

கன்றுக் குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்றுக் குடையா எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி

இந்தப் பாசுரத்தில் ஸ்ரீ ஆண்டாள் வாமன, ஸ்ரீ இராம, ஸ்ரீ கிருஷ்ண அவதார அற்புதங்களை குறிப்பிடுகின்றார்.

ஸ்ரீ ஆண்டாள் தன் 25 ஆவது பாசுரத்தில் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர என்று குறிப்பிடுகின்றார்.

தேவகிக்கு மகனாகப் பிறந்தாலும் அந்த இரவிலேயே யசோதைக்கு மகனாக கோகுலத்திற்கு வந்து சேர்ந்த நிகழ்வை அல்லவா சிறப்பித்துக் கூறுகின்றார்.

கண்ணனின் பெருமைகளை கேட்பவர் மகிழ்ச்சி அடைவதைக் காட்டிலும், பாடுபவரே அதிக மகிழ்ச்சி அடைவர் என்பதற்கு ஸ்ரீ ஆண்டாளே சாட்சி!

மாலே மணிவண்ணா என மனமுருக பாடுகின்றார்! பாடி உருகுகின்றார்!

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா! என்ற 27 ஆவது பாசுரத்தில் குறிப்பிடுவது கூடார் என்பதற்கு பகைவர்கள் என்று மட்டும் பொருள் கொள்ளாமல், அவனை இதுவரை வந்து அடைந்து கூடாத அன்பர்கள் என்றும் பொருள் உணரலாம்.

பகைவர்களையும், அன்பர்களையும் ஒருசேர வெல்கின்ற கோவிந்தா என்று அழைக்கின்றாள். ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார்! தம் 29 ஆவது பாசுரத்தில்

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து
உன் பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்

பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தின் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறை கொள்வான் னன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன்தன்னோடு உற்றோமே ஆவோம்
உனக்கே நாம் ஆட்செய்வோம் மற்றை
நங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்

இப்பாசுரம் மிக மிக முக்கியமானது.

வைணவர்கள் மார்கழி மாதம் முழுவதும் தினம் 30 பாசுரங்கள் சொல்ல முடியாவிட்டாலும் "சிற்றஞ் சிறுகாலே" என்ற இந்த அழகிய பாசுரத்தையாவது மகிழ்வுடன் சொல்லி வழிபட வேண்டும்.

வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதைத் தமிழ் என்பார்கள் சமயச் சான்றோர்!

"வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி அங்கப் பறை கொண்ட ஆற்றை அணி புதுவைப் பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே இங்குஇப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய்

எவ்வளவு அழகாக தன் முப்பதாவது பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார் பாருங்கள்!

இந்த பூமிக்கு ஒப்பற்ற அணிகலன் போன்றதான, வட பெருங் கோயிலுடையானும் ஸ்ரீ ஆண்டாளும், ஆழ்வாரும் சேர்ந்து இருக்கும்படியான திரு பெருமைகளைப் பெற்ற ஸ்ரீ வில்லிபுத்தூரில் அவதரித்த பட்டர்பிரான் என அன்பொழுக போற்றப் பெறுகின்ற "ஒரு மகள் தன்னுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்" என்ற பெரிய ஆழ்வார் அருமை மகளான, அவரையே தனது ஆசானாகவும் கொண்ட ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த அமிழ்தினும் இனிய தமிழ் தெய்வப் பனுவலான சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே அதாவது

ஒரு இரத்தின மாலையில் ஒரு மணி குறைந்தாலும் அதன் அழகு குறையும். ஸ்ரீ ஆண்டாளின் முப்பது பாசுரங்களையும் முழுதுமாக நெஞ்சுருகி பாடி வழிபட்டால் பதினாறு வகைச் செல்வங்களை பெற்று பெரு வாழ்வு வாழ்வது உறுதி!

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த மற்றொரு திவ்ய பிரபந்தம் நாச்சியார் திருமொழி!

இது 143 பாசுரங்களைக் கொண்டது.

ஸ்ரீ கண்ணபிரானை திருமணம் செய்து கொள்வதாக கோதை கண்ட கனவை அதில் அழகாக பதிவு செய்கின்றார்.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்
என்றும்

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான் நம்மை யுடையவன் நாராயணன் நம்பி செம்மை யுடைய திருக்கையால் தாள் பற்றி அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழி நான்"

ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் அருளிச்செய்த நாச்சியார் திருமொழியை இளம்பெண்கள் மனமுருகப் பாடி திருமாலவனை வழிபட்டால் இனிய இல்லறம் பெறுவர்!

கற்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ? மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண் சங்கே! என்று திருமால் பெருமையை தம் நாச்சியார் திருமொழியில் சொல்லி மகிழ்கிற மாட்சி அழகு வாய்ந்தது! மார்கழித் திங்களில் தமிழை மட்டுமா ஆண்டாள்! கண்ணனையே ஆண்டாள்!

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஸ்ரீ ஆண்டாள் பொற் பாத கமலங்களை போற்றியே மனமுருக வழிபடுவோம்.



# சுடர்க்கொடி, ஏன் சூடிக் கொடுத்தாள்?

~ பிரபு சங்கர்

மலர்க் கரங்கள் மலர்ச் சரத்தைத் தொடுத்துக் கொண்டிருந்தன.

தளிர் விரல்களின் மென்மை பட்டு பனிப் பூக்கள் பரவசம் எய்தின. ஒரே செடியில் ஒன்றாக மலர்ந்தும், தனித்தனியே பிரிக்கப்பட்டதால் வேதனை அடைந்த பூக்கள் இப்போது ஒன்றாய்த் தொடுக்கப்படுவதில் குதூகலம் கொண்டன. அந்த உதிரிப் பூக்களுக்கு, தாம் ஒன்றாய் இணைக்கப்பட்டு, மாலையாக உருவாகும் சந்தோஷம்! ஒரே செடியில் என்றில்லாமல் பல செடிகளிலிருந்தும் கொய்யப்பட்ட பல வண்ண மலர்கள் விதவிதமான நறுமணத்தோடு ஒரு மாலையாக உருவாகும் ஒன்றுபட்ட உணர்வு!

இங்கே வண்ணப் பிரிவு இல்லை, வாசனைப் பிரிவு இல்லை, சிறியது, பெரியது என்ற பாகுபாடு இல்லை. எல்லாம் ஒன்றாய் இணைக்கப்பட்டு ஒரே மாலையாய்.... இறைவனின் தோளைத் தழுவப் போகும் ஆனந்தத்தில்....

இப்படி ஒரு மகிழ்ச்சியைத் தமக்குத் தரும் மென்மையான விரல்களுக்குத் துன்பம் தரலாகாது என்பதால், தம்மோடு சேர்த்தே பறிக்கப்பட்ட முள் மற்றும் கடினமான காம்புகள் எல்லாம் மலர்களை வாழ்த்திவிட்டுத் தாமாகவே உதிர்ந்து விலகின.

அந்தப் பூக்கரங்களுக்கு உரியவள் ஆண்டாள் என்ற கோதை... பூங்கோதை.... மலரினும் மென்மையான இளந்தளிர்.... அப்பா பெரியாழ்வார், அதிகாலைப் பொழுதிலேயே பனிவிழும் மலர்வனமாகிய நந்தவனத்திலிருந்து பறித்தெடுத்து, கொடுத்துவிட்டுப் போன மலர்களை, பூக்கூடையிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து, வண்ணம் பிரித்து அழகான மாலையாக உருவாக்கிக் கொண்டிருந்தாள் ஆண்டாள். தந்தையாரின் இறைச் சேவைக்குத் தன்னால் ஆன உதவி!
ஸ்ரீவில்லிப்புத்தூர் திருக்கோயிலில் திருச்சந்நிதி கொண்டு அருள்பாலிக்கும் எம்பெருமான் வடபத்ரசாயியின் திருமேனியை ஆண்டாள் தொகுத்துக் கொடுத்த மலர் மாலைதான் தினமும் அலங்கரித்தது.
வடபத்ரசாயியான ஸ்ரீரங்கத்து அரங்கனை, ஆயர்பாடி கண்ணனை ஆராதித்தவாறே ஆண்டாள் மலர்க் கைங்கர்யம் செய்வதும், இதனாலேயே அவளுடைய தினசரிக் கடமைகளில் ஒன்றாகி விட்டது.
மல்லிகைப் பூவை எடுத்தாள் - மஹாவிஷ்ணு முறுவலித்தார்; பவழவல்லி மலரை எடுத்தாள் - பரந்தாமன் கண் சிமிட்டினார்; சாமந்தியை எடுத்தாள் - அதில் சார்ங்கபாணி சிரித்தார்; செவ்வரளியை எடுத்தாள் - ஸ்ரீரங்கன் செம்பவள வாய் காட்டினார். கருநீல குவளை மலர் எடுத்தாள் - கண்ணன் கார்மேகனாகக் கருத்தைக் கவர்ந்தான்....
ஒவ்வொரு மலரையும் மென்மையாய் வருடி எடுக்க, அவை ஒவ்வொன்றும் திருமாலைத் தீண்டும் தீஞ்சுவை தந்தன. பாற்கடல் நாயகனின் பலவகைத் தோற்றங்களைக் கண்டு உள்ளம் குளிர்ந்தாள் கோதை. அவளுடைய உதவியால் மலர்களைத் தொகுக்கும் பணி மட்டுமல்லாமல், தாமும் தாமோதரனைத் தழுவும் ஆனந்தம் கொண்டு இன்புற்றது நார். ஆமாம், அந்தப் பூக்களோடு சேர்ந்த நாரும், நாறும்தானே! அதுமட்டுமா, இறைவன் திருமேனியை அலங்கரிக்கும் மலர்களைத் தொகுத்து இணைத்திருப்பது தான்தான் என்றாலும், அந்த கர்வம் விலக்கி, மலர்களின் நுனி மற்றும் காம்புகளோடு மட்டும் உறவு கொண்டு மலர்களுக்குப்



பின்னால் அடக்கமாக மறைந்திருந்தது அந்த நார்.

இரண்டு பக்கமும் தன் உயரத்துக்கு நீண்டுவிட்ட அந்த மாலையை மெல்லத் தூக்கினாள் ஆண்டாள். மாலையாய்ப் புது உருக்கொண்டிருந்த மென் மலர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற தயக்கத்துடன் பிடித்தும், பிடிக்காததுபோல மென்மையாக அதைப் பற்றியபடி எழுந்தாள். கோதையின் விரல்கள் அழுத்தத்தால் கொஞ்சமும் கசங்காத அந்த மலர்கள் மேலும் மலர்ந்தனவோ!
தான் தொடுத்த மாலையைப் பெருமிதத்துடன் பார்த்தாள் ஆண்டாள். இதென்ன, ஒவ்வொரு மலரிலுமிருந்து மாயவன் தோன்றி சிரித்து மயக்குகிறானே!
அட, மலர்களில் மட்டுமா, காணும் இடங்களில் எல்லாம் அந்த நந்தலாலாதான்.... வீட்டில் உள்ள எல்லா பொருட்களும் அவனாகவே மாறிவிட்ட மாயம்... என்ன விந்தை இது! கல்லுரலும், கடப்பாரையுமா கண்ணனாகும்!
அந்தந்தப் பொருட்களின் அதே வடிவில், அதே வண்ணத்தில் ஆநிரை அனந்தன்! வீட்டுச் சுவர், தூண்கள், அலமாரி, பிறை மாடம், பாத்திரங்கள், பண்டங்கள் என்று எல்லா அஃறிணைகளும் அரங்கனாகவே மாறிவிட்ட பேரதிசயம்!
ஆண்டாள் முகம் வெட்கத்தால் சிவந்து மலர்ந்தது. குப்பென்று மனசுக்குள் புகுந்த நாணம் அவளுடைய நடையைத் தளரச் செய்தது. ஆமாம், எங்கெங்கு நோக்கினும் ரங்கன். அத்தனை ரங்கன்களும் அவளையே, அவளை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், புன்னகைக்கிறார்கள், இரு கரம் நீட்டி அவளை அழைக்கிறார்கள்.... அத்தனை ரங்கன்களுக்கும் நடுவே தனியளாக ஆண்டாள்!
மனம் மயக்கம் கொண்டாலும், தந்தையாருக்குச் செய்யும் தினசரிப் பணியின் நிறைவுக் கட்டமாக அந்த மாலையை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு பூஜையறையை நோக்கி மெல்லடி எடுத்து வைத்தாள்.

போகும் வழியில் சுவர் ஓரமாக ஒரு கண்ணாடி. தன்னைச் சுற்றிலும் ரங்க வாசம் கமழ, அந்த உணர்வில் வெட்கம் மேலோங்க பரவசத்துடன் அந்த கண்ணாடியைக் கடந்த அவள், சட்டென்று நின்றாள். தன்னோடு கடந்து வந்த, கண்ணாடியில் பிம்பமாகத் தோன்றியது யார்?
தயங்கினாள். பின்னடி எடுத்து வைத்தாள். கண்ணாடி முன் நின்றாள். அப்படியே அதிசயித்து நெகிழ்ந்தாள்.

தன் முன்னால் நிற்பவரை பிரதிபலிப்பதுதானே கண்ணாடியின் இயல்பு? ஆனால் இதென்ன, முன்னே நிற்கும் தன்னை பிரதிபலிக்காமல் கண்ணனை அல்லவா காட்டுகிறது! உள்ளம் குறுகுறுக்க கண்ணாடியையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

கண்ணாடியில் தோன்றிய பிம்பக் கண்ணனைக் கண்டு ஆண்டாள் பொங்கிச் சிரித்தாள். அட, கண்ணனும் அதேபோல சிரிக்கிறானே! தான் காண்பது உண்மைதானா என்ற சந்தேகத்தில் தன் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள் ஆண்டாள். அடடே, பிம்பக் கண்ணனும் தன் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொள்கிறானே! செயல்கள் எல்லாம் ஒரே மாதிரிதான் பிம்பிக்கின்றன, ஆனால் உருவங்கள் வேறு! இது என்ன அதிசயம்!
கண்ணாடிக்குள் கண்ணன் இருக்கிறானா என்பதை அவள் 'உறுதி' செய்து கொள்ள விரும்பினாள். தான் ஏந்தி வந்த பூமாலைத் தட்டை பக்கத்தில் வைத்தாள். கண்ணனும் அப்படியே பக்கத்தில் வைத்தான். தட்டிலிருந்து மாலையை எடுத்து உயரே தூக்கிப் பிடித்தாள். அவனும்!
சட்டென்று ஆண்டாளுக்கு ஒரு யோசனை. இந்த மாலையை கண்ணாடி மேல் சாத்தினால் அதை கண்ணன் ஏற்றுக் கொள்வானா?
உடனே அந்த மாலையை கண்ணாடி மேல் சாற்றினாள். ஆனால் அது சரிந்து கீழே விழப் பார்த்தது. லாகவமாக அதைப் பற்றிக் கொண்டாள் ஆண்டாள். ஆக, அது கண்ணாடிதான். ஆனால் பிரதிபலிப்புதான் கண்ணன்! ஆக, கண்ணாடி ஏற்றுக் கொள்ளாத மாலையை கண்ணன் ஏற்றுக் கொள்ள என்ன செய்யலாம்?
எல்லாப் பொருட்களிலும் நிறைந்திருக்கும் கண்ணனின் கழுத்தில் மாலை நிற்க வேண்டுமானால், அந்த பிம்பத்தை உருவாக்கிய தான் அதை அணிந்து கொள்வதுதான்தான் சரி. உடனே அந்த மாலையைத் தான் அணிந்து கொண்டாள். அட, பிம்பக் கண்ணன் கழுத்தில் அந்த மாலைதான் எத்தனை ஒய்யாரமாக, கர்வமாக சூடியிருக்கிறது! தன் இருபக்கமும், தான் அணிந்திருக்கும் மாலை சம உயரத்தில் இருக்கிறதா என்று ஆண்டாள் பார்க்க, அதையே கண்ணனும் செய்தான்.

சரிதான், பிம்பம் கண்ணனேதான்! அப்படியே நெகிழ்ந்து போனாள் ஆண்டாள்.
இந்த நெகிழ்ச்சியில் ஆண்டாள் தினந்தோறும் ஆழ்ந்து போக, ஒருநாள் பெரியாழ்வார் அதைக் கண்டு பிடித்து, அவள் அபசாரம் செய்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார். ஆனால் ஸ்ரீவில்லிப்புத்தூர் நாயகனோ, அவள் சூடித் தந்த மாலையே தனக்கு உகந்தது என்று அவருக்கு உணர்த்தியதோடு, ஸ்ரீரங்கனை அவள் மணந்து கொள்ளவும் விதி செய்தார்.

# மாண்பு நிறை மார்கழித் திங்கள்

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்" என மிகுந்த பக்திச் சிறப்புடன் ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை முதல் பாசுரத்தில் அற்புதமாக குறிப்பிடுகின்றார். மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்கிறார் ஸ்ரீ கண்ணபிரான்.

மார்கழி மாதத்தில்தான் வைகுண்ட ஏகாதேசி எனும் பெருமாளின் சொர்க்கவாசல் திறப்பு அதாவது பரமபத வாசல் திறப்பு எனும் அற்புத நிகழ்வு நடைபெறும்.
வைகுண்ட ஏகாதசி நாளில் முழு ஈடுபாட்டுடன் விரதம் இருந்து பெருமாளை சேவிப்பது சிறப்பு.

மார்கழி மாதம் முழுவதும் பெருமாள் கோயில்களில் அதிகாலையிலேயே திருமஞ்சனம். தூப தீப ஆராதனைகள் அலங்காரங்கள், நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் ஓதுதல் என அற்புதமாக நடைபெறும்.

திருப்பாவை பாசுரங்களும் அழகாக பாடப் பெறுவது உண்டு.
சைவ சமயத்தவருக்கும் மார்கழி மிகுந்த சிறப்புடைய மாதமாகும். அனைத்து விநாயகர் கோவில்கள் சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள் அம்பிகை எழுந்தருளும் திருக்கோயில்கள் என எல்லா ஆலயங்களிலும் வைகறைப் பொழுதில் அபிஷேக ஆராதனைகள் அற்புதமான அலங்காரங்கள், தூப தீப ஆராதனைகள் என சிறப்பாக நடைபெறுவது உண்டு.

அப்பர் என்று அன்பொழுக அழைக்கப்பெறும் திருநாவுக்கரசர் அருளிய தேவாரம் திருஞானசம்பந்தப் பெருமான் மற்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் திருப்பதிகங்களும், மாணிக்கவாசகரின் திருவாசகமும் பக்தியுடன் பாடப்பெறும்.
சைவ சமயத்தின் மிக முக்கியமான விசேஷம் ஆருத்ரா தரிசனம். திருவாதிரை நட்சத்திரம் நாளில் ஆதிரையான் (சிவபெருமான்) சிவகாமசுந்தரியாம் உமையாளுடன் ஆனந்த தாண்டவம்! ஆடல்வல்லானின் ஆருத்ரா தரிசனம் நிகழ்வதும் மார்கழித் திங்களில் தான்!
மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவையில் "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதி" என்கிறார். இதில் முதல் எழுத்து "ஆ" அதாவது ஸ்ரீ ஆண்டாளை குறிப்பதாகும். ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை பாசுரத்தில் "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்" எனும் முதல் வரியில் முதலெழுத்து "மா" என்பதாகும். அதாவது மா என்பது மாணிக்கவாசகரை போற்றுகின்றார்.
அனைத்து சிவாலயங்களிலும் பெருமாள் சந்நிதிகள் மிகுந்த சிறப்புடன் அமைந்திருப்பதை தரிசிக்கலாம்.
சைவம் வைணவம் வேறு என்ற எவ்வித பேதமும் இல்லை. நெல்லையில் சங்கரநாராயணராக, சுசீந்திரத்தில் மும்மூர்த்திகளும் ஓர் மூர்த்தியாக அதாவது தாணுமாலயன் சுவாமியாக அருட் காட்சி அளிப்பதைக் காணலாம். மார்கழி மாதத்தில் பொதுவாக அதிகாலையில் எழுந்து இளம் பெண்கள் மனம் மொழி மெய் ஒன்றுபட வண்ண வண்ண மாக்கோலங்கள் போட்டு நீராடி, வாசமிகு மலர்களைத் தொடுத்து, தூய ஆடைகளை அணிந்து பக்தி சிரத்தையுடன் திருக்கோயில்களுக்குச் சென்று தீபங்கள் ஏற்றி, சுவாமி தரிசனம் செய்வதால் உயர்ந்த மண வாழ்வு பெறலாம்.
மார்கழி மாதம் தெய்வீக மாதம் எனலாம். அதிகாலையில் சுவாமி தரிசனம் புதுப்புது கோலங்கள் போடுவது, தெய்வீக பாடல்களைப் பாடுவது. தெரிந்தவர்களுடன் தெய்வீக மகானுபவத்தை பெறுவதும் ஓர் உயர்ந்த உணர்வு தானே! இத்தகைய ஆனந்தமான, ஆத்மார்த்தமான பவித்ரமான பக்தி நம்மை உற்சாகப் படுத்துவதோடு உன்னதமான வாழ்க்கையை அடைய இந்த மார்கழிமாதம் உதவும்.



# ஆருத்ராவன்று தரிசித்தாலே பலன்...!!

~ திருவாரூர் சு.சேகர்.

சிவபெருமான் நெருப்பு உருவமாக தன்னை வெளிப்படுத்திக் காட்டிய நாள் சிவராத்திரி. சிவபெருமான் இப்பூமியை ஆவிர்ப்பித்த (தோற்றுவித்த) நாள் ஆருத்ரா தரிசனம். சிவராத்திரியன்று அவரை வழிபட்டால் பலன். ஆருத்ராவன்று தரிசித்தாலே பலன்...

மார்கழி மாதம் பௌர்ணமியோடு, திருவாதிரை நட்சத்திரம் கூடி வரும் நாளன்று "திருவாதிரை" திருவிழா "ஆருத்ரா தரிசனம்" திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. ஆருத்ரா என்ற வடமொழி சொல் தமிழில் "ஆதிரை" என்று அழைக்கப்படுகிறது. அதோடு திரு என்ற அடைமொழி சேர்த்து "திருவாதிரை" என்று சிறப்பாகக் கொண்டாடுகிறது. திருவாதிரை அன்று நடராஜப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெறும். இந்த ஆனந்தத் திருநாளில் ஆனந்த தாண்டவம் ஆடும் நடராஜப் பெருமானை சிதம்பரத்திற்குச் சென்று தரிசிப்பது விசேஷமாகும்.

### புராணத்தில் ஆருத்ரா தரிசனம்:

மகாவிஷ்ணுவின் ஆசியால் திருவாதிரை நாளன்று சிவபெருமான் நடராஜராக ஆடப் போவதைக் காணும் மகிழ்ச்சியில் ஆதிசேஷன் பதஞ்சலி முனிவராக உருக் கொண்டு, பூலோகம் வந்து தவம் செய்யத் தொடங்கினார். தவம் முடிவு அடைந்தபோது, பதஞ்சலி முனிவர் முன் சிவபெருமான் தோன்றி, உம்மைப் போலவே வியாகரபாத முனிவரும் திருநடனம் காணவேண்டி காத்திருக்கிறார். நீங்கள் இருவரும் தில்லையில் என் நடனத்தைக் கண்டு மகிழ்வீராக என்று கூறி மறைந்தார். அதன்படி பதஞ்சலி முனிவரும் வியாகரபாதரும் சிதம்பரம் திருத்தலத்தில் திருவாதிரை நாளில் திருநடனத்தைக் கண்டனர்.

தாருக வன முனிவர்களின் அகந்தையை அடக்கி தனக்கு எதிராக ஏவப்பட்ட யானையை தன் ஆடையாக்கி, உடுக்கு, தீ, பாம்பு முதலியவற்றை ஆபரணமாகக் கொண்டு அவர்களுக்கு முன் சிவபெருமான் நடராஜர் ரூபத்தில் காட்சியளித்தது ஆருத்ரா தரிசனம் நாளன்றுதான் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன.

ஆருத்ரா தரிசனம் அன்றுதான் ஈசன் தேவலோகப் பசுவான காமதேனுவுக்கும் தரிசனம் தந்து அருள்புரிந்ததாக ஐதீகம்.

ஆருத்ரா தரிசனம் அன்றுதான் பார்வதி தேவியின் தவத்தில் மகிழ்ந்து அவரை மணக்க சிவபெருமான் சம்மதம் கூறிய நாளாகக் கருதி, இன்றும் கன்னிப்பெண்கள் தங்களுக்கும் நல்ல கணவன் கிடைக்க வேண்டி நோம்பை அனுஷ்டிக்கிறார்கள்.

ஆருத்ரா தரிசனம் அன்றுதான் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை நிறைவுற்று அவர் ஈசனை தரிசித்தார்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தமது தேவாரத்தில் ஆதிரை நாளைப் பின்வருமாறு சிறப்பித்துள்ளார்...

"ஊர்திரை வேலை யுலாவும் உயர்மலைக்
கூர்தரு வேல்வல்லார் கோற்றங் கோள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியார் பூம்பாவாய்"

எனவே மார்கழி திருவாதிரை தினத்தன்று விரதம் இருந்து, சிவாலயம் சென்று, நடராஜ தரிசனம் கண்டால் பாவங்கள் விலகி புண்ணியம் பெருகும் என்கின்றன புராணங்கள்.



### திருவாதிரைக் களி:

'திருவாதிரைக்கு ஒருவாய்க் களி' என்பது பழமொழி. எனவேதான் மார்கழி திருவாதிரை அன்று

விரதம் உள்ள பக்தர்கள் அன்று ஒரு வாய்களி தின்று மகிழ்கின்றனர். இதே திருவாதிரை நாளன்று ஒருவாய் களி தின்றால், அதன் பலன் அளவிடற்கரியது. திருவாதிரை விரதம் இருப்பவர்கள் களி செய்து படைக்கும் வரை வெறும் வயிற்றுடன் தியானிப்பதோடு, சிவாலயம் சென்று நடராஜரைத் தரிசித்து வருவது சிறப்பு என்கின்றன புராணங்கள்.

சிவபெருமானுக்கு நைவேத்தியம் செய்யப்படும் திருவாதிரைக் களியின் பின்னணியில் பக்திபூர்வமான வரலாறு ஒன்று உள்ளது. சிதம்பரத்தில் விறகுவெட்டியாக வாழ்ந்து வந்த சேந்தனார் தினமும் சிவனடியாருக்கு உணவளித்த பின்பே உணவருந்துவார். ஒருநாள் மழையாக இருந்ததால், அவரது ஈர விறகை வாங்க எவரும் வரவில்லை. மனம் நொந்து போன நிலையில் வீடு வந்து சேர்ந்தார். அவரிடம் அரிசி வாங்க பணம் இல்லை. எனவே அன்று தன்னிடம் உள்ள கேழ்வரகில் களி செய்து சிவனடியாரை எதிர்பார்த்திருந்தார், சிவனடியார் யாரும் வராததால் மன வருத்தப்பட, வாசல் திண்ணையில் அமர்ந்திருந்தார். சேந்தனாரின் பக்தியை உலகிற்கு உணர்த்த விரும்பிய நடராஜப் பெருமான் ஓர் சிவனடியார் வேடத்தில் சேந்தனார் வீட்டிற்கு வந்தார். சேந்தனார் மிக்க மகிழ்ச்சியுடன் களியை சிவனடியாருக்கு விருந்திட்டார். சிவனடியார் களியை ஆசையாக சாப்பிட்டு பின் மீதமிருந்த களியையும் தனது அடுத்த வேளை உணவிற்குத் தருமாறு வாங்கிச் சென்றார்.

மறுநாள் காலையில் வழக்கம் போல் சிதம்பரம் கோயில் அர்ச்சகர்கள் கருவறையைத் திறந்த போது நடராஜப் பெருமனைச் சுற்றி எங்கும் களிச் சிதறல்கள் இருந்தன, ஏதோ அபச்சாரம் நடந்துவிட்டதாக அரசருக்கு அறிவித்தார்கள்.
ஆனால் தென்னாடுடைய சிவபெருமான் நடந்தது அனைத்தும் தமது திருவிளையாடலே என்பதை மன்னர் முதலான அனைவருக்கும் தெளிவுபடுத்தி அருள்பாலித்தார். இந்த நிகழ்வு நடந்தது ஒரு திருவாதிரை ஆருத்ரா தரிசனம் அன்றுதான். அதுமுதல் இன்றும் திருவாதிரை நாளில் நடராஜப் பெருமானிற்குக் களி நைவேத்தியம் செய்யப்படுகின்றது. எனவே 'திருவாதிரைக்கு ஒரு வாய்க்களி' என்ற சொலவடையே ஏற்பட்டது.

### தில்லையில் ஆருத்ரா தரிசனம்:

திருவாதிரை நாளன்று சிதம்பரத்தில் அதிகாலை சூரிய உதயத்திற்கு முன் ஆயிரங்கால் மண்டப முகப்பில் ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீநடராஜப் பெருமானிற்கு அபிஷேகமும், புஷ்பாஞ்சலியும் நடைபெறும். பின்னர் ஆயிரங்கால் மண்டபத்தில் திருவாபரண அலங்காரமும், சித்சபையில் பூஜையும் நடைபெறும். அதனையடுத்து பஞ்சமூர்த்திகள் வீதி உலா வந்த பின்னர் பிற்பகல் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீநடராஜப் பெருமானும் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்மனும் புறப்பட்டு நடனப்பந்தலில் நடனமாடி ஆருத்ரா தரிசன காட்சியளித்து, சித்சபா பிரவேசம் செய்வர்.

ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஆருத்ரா தரிசனம் கண்டால் தீராத நோய்களும், பாவங்களும் விலகும் என்பது ஐதீகம்.

### திருஉத்திரகோசமங்கை ஆருத்ரா தரிசனம்:

திருஉத்திரகோசமங்கை இராமநாதபுரம் அருகே உள்ள மிகவும் பழமையான திருக்கோயில். இங்கு தான் முதன்முதலில் ஆருத்ரா தரிசனம் கொண்டாடப்பட்டது. இங்கு மார்கழி மாதம் நடக்கும் ஆருத்ரா தரிசனம் மிகவும் பிரசித்தி பெற்றது.
இக்கோயிலில் நவரத்தினங்களில் ஒன்றான பச்சை மரகதக்கல்லினால் ஆளுயரத்தில், நடனம் ஆடும் திருக்கோலத்தில், விலை மதிக்க முடியாத அபூர்வ நடராஜர் சிலை உள்ளது. தமிழர்களின் கலைத்திறனுக்கும், நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் இச்சிலை அமைந்திருப்பது கூடுதல் சிறப்பாகும். நவரத்தினங்களில் ஒன்றான பச்சை மரகதம் இயற்கையாகவே மென்மையானது. ஒலி, ஒளி அதிர்வுகளைத் தாங்க முடியாத தன்மை உடையது. "மத்தளம் முழங்க மரகதம் உடைபடும்" என்ற சொல்லுக்கேற்ப ஒலி, ஒளி அதிர்வுகளிலிருந்து இச்சிலையைப் பாதுகாக்க சிலைக்குச் சந்தனம் பூசிப் பாதுகாத்து வருகிறார்கள்.

ஆருத்ரா தரிசன திருநாளில் மட்டும் பக்தர்களின் தரிசனத்திற்காக சந்தனப்பூச்சு கலையப்பட்டு காலை முப்பத்திரண்டு வகையான அபிஷேகங்கள் செய்து தீபாராதனை நடைபெறும். பின் நைவேத்தியம் பண்ணிய பிறகு அலங்காரம் செய்யப்படும். திருஉத்திரகோசமங்கையில் மட்டும் தான் அபிஷேகம் முடிந்து நைவேத்தியம் பண்ணிய பிறகு அலங்காரம் செய்வது சிறப்பான ஒன்றாகும். அன்று இரவே மீண்டும் சந்தனம் பூசப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது.

இன்றைய தினம் திருஉத்திரகோசமங்கையில் சந்தனம் கலையப்பட்ட நிலையில் மரகத நடராஜரைத் தரிசனம் பண்ணலாம்.

இதைக் காண்பவர்க்கு பிறவிப்பிணி தீரும் என்பது ஐதீகம்.
ஓம் சிவாய நமஹ!!

# கடலூர் அருகே....
# திருவஹீந்திரபுரம்
# ஸ்ரீ தேவநாதப் பெருமாள்
# திருக்கோயில்...

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற 108 திருப்பதிகள் பற்றி நாம் அறிவோம்.

இந்த 108 திருப்பதிகளுள் 23 ஆவது திருப்பதியே திருவஹீந்திரபுரம் ஸ்ரீ தேவநாத சுவாமி திருக்கோயில் ஆகும்.

கடலூர் புது நகரிலிருந்து மேற்கே, சற்று தொலைவில் திருவஹீந்திரபுரம் என்னும் இயற்கை எழில் சூழ்ந்த இனிய ஊர்! அமைந்துள்ளது.

கடலூர் புதுநகர் பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்து வசதி உண்டு. ஷேர் ஆட்டோக்களும் இவ்வூருக்கு உள்ளன.

இந்த எழில்மிகு ஊரில் தொன்மை வாய்ந்த பெருமாள் கோயில் ஒன்று கம்பீரமாக அமைந்து உள்ளது. இத்தல பெருமாளின் திருநாமம் ஸ்ரீ தேவநாத ஸ்வாமி ஆகும். தாயார் திருநாமம் வைகுண்ட நாயகி.

இக்கோயில் முன்பாக ஒரு சிறிய மலை ஒன்று உள்ளது. பக்தர்கள் எளிதாக மேலே செல்ல கருங்கல்லால் ஆன படிக்கட்டுகள் அமைந்துள்ளது. மலையின் மீது ஹயக்ரீவர் சுவாமி சந்நிதி உள்ளது. இந்தக் கோயிலில் பெருமாளை சேவித்தால் கல்வியில் உயர்வு அடையலாம் என்பது ஐதீகம்.

ஸ்ரீ தேவநாத சுவாமி திருக்கோயில் அருகில் ஸ்ரீ ஆஞ்சநேயர் சந்நிதி அழகாக அமைந்துள்ளது. பன்னெடுங் காலமாக இந்தக் கோயிலில் அறுபது அகவை கண்டவர்கள் மணி விழா நடத்துவது சிறப்பு.

இக்கோயிலில் பல்லாயிரக்கணக்கான திருமணங்கள் நடந்துள்ளன.

இத்திருக்கோயிலில் திருமணம் செய்து கொண்டால் நீண்ட காலம் மனமொத்த தம்பதிகளாக நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று பெருவாழ்வு அடைவர் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

நின்ற கோலத்தில் ஸ்ரீ தேவநாத பெருமாள் அருட் காட்சி அளிப்பதை ஆனந்தமாக தரிசிக்கலாம்.

சுவாமியின் பேரழகை காண கண் கோடி வேண்டும்.

கோயில் உள்பிரகாரத்தில் ஸ்ரீ செங்கமலத் தாயார் சன்னிதி எழிலுற அமைந்துள்ளது.

திருக்கோயிலில் உள்ள பிரகாரத்தில் நாலாயிர திவ்விய பிரபந்தம் அழகாக பதிக்கப் பெற்றுள்ளது.

புரட்டாசி மாதத்தில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடி மனமுருக வழிபடும் அற்புதத்தைக் காணலாம். அதிலும் புரட்டாசி சனிக்கிழமைகளில் பல மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்வதை பார்க்கலாம். திருவஹீந்திரபுரம் ஸ்ரீ தேவநாத சுவாமிக்கு வேண்டிக் கொண்டால் அதை நிறைவேற்றித் தருவார் என்பது ஐதீகம்.

இங்குள்ள தீர்த்தத்திற்கு கருட தீர்த்தம் என்பதாகும். கருடனே நீரூற்றை உருவாக்கியதாக கூறுவர்.

இலங்கைப் போரில் ஸ்ரீ ராம லக்ஷ்மணருக்காக



சஞ்சீவி பர்வத மலையையே தூக்கி வந்தவர் ஸ்ரீ ஆஞ்சநேயர்.

அப்படி மூலிகை நிறைந்த மலையைத் தூக்கி வருங்காலத்தில் அம்மலையின் சிறு பகுதிகள் திருவஹீந்திரபுரத்தில் விழுந்ததாக சொல்லப் பெறுகிறது.

இந்த மலை ஔஷத மலை என வழங்கப்பெறுகிறது. ஔஷதம் என்றால் மருந்து- மருந்துகள் நிறைந்த மூலிகை நிறைந்திருப்பதால் ஔஷத மலை என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

இங்குள்ள தீர்த்தத்தில் குளித்தால் சகல சவுபாக்கியங்களையும் பெறலாம்.

வல்லமை தந்திடும் வரலட்சுமியாக, அஷ்ட ஐஸ்வர்யங்களை அளித்திடும் மகாலட்சுமியாக, யோகங்களைப் பொழிந்திடும் கனகலட்சுமியாக நலம் யாவும் நல்கும் சுப லட்சுமியாக திகழ்ந்திடும் செந்தாமரைக் கண்ணனின் இதயக் கமலத்தில் வசிக்கும் பாக்கியலட்சுமியாக செங்கமலத்தாயார் மிகுந்த பேரெழிலுடன் அருள்பாலிப்பது போல் வேறு எங்கும் காண இயலாது.

ஸ்ரீ தேவநாத பெருமாள் பொற்பாத கமலங்கள் முதல் அருள் முகம் வரை கண்ணாரத் தரிசிக்க வேண்டும். பின் அருள் முகம் தொடங்கி அமுத மலரடி வரை தரிசித்து நிறைவு செய்ய வேண்டும். முப்பொழுதும் ஸ்ரீ திருவஹீந்திரபுர ஸ்ரீ தேவநாதப் பெருமாளை ஆத்மார்த்தமாக சேவிப்போம்! திருமாலின் திருவருள் பெறுவோம்.

# கிருஷ்ணன் வந்தான்

~ ரா.பன்னீர் செல்வம்

கோதை ஓயாமல் புலம்பிக்கொண்டு இருந்தாள்! நன்றாக பழுக்கக் காய்ச்சிய இரும்பு, தண்ணீர் பட்டதும்“ சொர்“ என ஒரு சத்தம் எழுப்புமே, அந்த சத்தம் கூட இல்லாமல் தரையை பார்த்தபடி அமர்ந்திருந்தார் அவரது மணவாளன் கோபாலன்!

இது எதையுமே லட்சியம் செய்யாமல், தனக்கு இந்த பேச்சில் சம்பந்தமே இல்லை என்பது போல் துவைத்த துணிகளை அலசிக் கொண்டிருந்தாள் ருக்மணி!

பிரச்சனை இது தான்.... ருக்குவுக்கு நேற்றுதான் இருபத்தி ஏழாவது வயது பிறந்திருந்தது! இன்னும் அவளுக்கு வியாழ நோக்கம் வரவில்லை! அதனால் திருமணம் இன்னமும் நடக்கவில்லை! ஒரே மகள்! பெரியவளாகி பத்தாண்டுகளுக்கு மேலாகியும் குத்துக்காலிட்டபடி வீட்டிலேயே இருந்தால், பெற்றெடுத்தவள் புலம்பத் தானே செய்வாள்! கோபாலனுக்கு நிரந்தர வருமானம் இல்லை!



கோதை தயார் செய்யும் முறுக்கு, தேன்குழல், அதிரசம் ஆகியவற்றை கொண்டு போய் விற்று வருவார்!

ஒருநாள் அனைத்தும் விற்கும்; மறுநாள் அப்படியே திரும்பி வரும். உடைந்த முறுக்குகளும், பிய்ந்த அதிரசங்களும் இவர்களின் உணவாக இருப்பதும் உண்டு! இந்தநிலையில் மகளுக்கு திருமணம்.... எப்படி?...

ருக்குவின் எளிமையான அழகைப்பார்த்து, பல வரன்கள் வந்தும் இரண்டு டம்ளர்களை வைத்து மாற்றி மாற்றி தண்ணீர் கொடுத்த இவர்களின் வறுமையைக் கண்டு, சொல்லாமல் கொள்ளாமல் சென்று விடுவதே வழக்கமாகிவிட்டது! இந்த நிலையில் ஒரு தாயாய் இருப்பவள், புலம்புவதை தவிர, வேறு ஒன்றும் செய்ய இயலாதவளாய் தன் புலம்பலைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

“பட்“டென எழுந்த கோபாலன், நெற்றியில் சற்றும் வளையாமல் நேராக நாமத்தை இட்டுக்கொண்டு, கண்ணாடியில் மீண்டும் மீண்டும் தன் முகத்தைப் பார்த்து, திருப்தியடைந்தவராய் திரும்ப... எரிச்சல் மண்டிய முகத்தோடு கோதை, ”போதும்.... அந்த கஞ்சிய குடிச்சுட்டு, முறுக்க எடுத்துட்டு புறப்படுங்க; நேரத்தோடு போனா தானே ஏதாவது விக்கும்; சும்மா கண்ணாடிய பார்த்தது போதும்”, என்றதும் கோபாலன் மடமடவென கஞ்சியைக் குடித்துவிட்டு, “டின்னில் அடைத்து வைத்திருந்த முறுக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டவர், சற்றே திரும்பி,” இனிமே வடை போட்டுக் கொடு; கோவிலுக்கு வர்றவங்க, கட்டு சோத்துக்கு கடிச்சுக்க வகையா இருக்கும்!” என பட்டும் படாமல் மனைவியிடம் சொல்ல, அவள், ”பார்ப்போம்!” என்றதும் சட்டெனப் புறப்பட்டு விட்டார்!

“கிருஷ்ணா.... நீதான் ஏதாவது வழி பண்ணி, எம் மகளுக்கு வாழ்க்கை கொடுக்கணும்; என்

புருஷனை நம்பினா, உடைஞ்ச முறுக்கு கதையாத்தான் இவ வாழ்க்கையும் ஆகிடும்! பகவானே! என்ன பண்ணப் போறியோ?!..." என காலண்டரில் இருந்த கிருஷ்ணனிடம் புலம்பினாள்!

இதுவரை வாய் திறக்காத ருக்கு, இப்படி நாளெல்லாம் புலம்பற? நமக்கு என்ன செய்யணும், எத கொடுக்கணும்னு அந்த பகவானுக்குத் தெரியும்; உன் புலம்பலை நிறுத்து", என்றபடி, முகத்தை அலம்ப, அவளை முறைத்தபடியே தன் புலம்பலை தொடர்ந்தாள் கோதை!

------------*----------------------------*-----------------

பஸ் ஸ்டாண்ட்! பெரியவர் ராமமூர்த்தி, தன் குடும்பத்தோடு பஸ்சை எதிர்பார்த்து காத்திருந்தார். அவரது மகளுக்கு அடுத்த வாரம் திருமணம்! அவரது மகனின் வருமானத்தில் திருமணத்திற்காக வாங்கிய 15 பவுன் நகையை குலதெய்வம் கோயிலில் வைத்து, பொங்கலிட்டு பூஜை செய்ய, குடும்பத்தோடு புறப்பட்டவர், பஸ்சுக்காக காத்திருந்தார்!

ராமமூர்த்தியின் தம்பிமகள், தன்னுடைய 3 வயது பையனை அடித்துக் கொண்டிருக்க, குழந்தை அழுதான்! "ஏன்மா அவனை அடிக்கிற? குழந்தை அப்படி இப்படித்தான் இருப்பான்! அதுக்காக அடிக்கலாமா?" என்றவர், அந்த சிறுவனை ஆதரவாய் தூக்கி வைத்துக் கொண்டார்!

அப்போது அங்கு முறுக்கு விற்றுக் கொண்டுவந்தார் கோபாலன்! அவரது தகர டின்னில் இருந்த ஒரு பக்க கண்ணாடி வழியாக தெரிந்த முறுக்கை பார்த்த சிறுவன், முறுக்கை காட்டி, கைநீட்டி அழுகையை அதிகப்படுத்த, கோபாலனை அழைத்த ராமமூர்த்தி, இரண்டு முறுக்கை சிறுவனுக்கு வாங்கிக் கொடுத்தார். சிறுவன் அழுகையை நிறுத்தி, முறுக்கை நொறுக்க ஆரம்பிக்க....

சற்று நேரத்தில் ராமமூர்த்தி எதிர்பார்த்த பேருந்து வர, அவரது குடும்பத்தினர் பஸ்ஸில் ஏறினர். வயல் வெளிகளுக்கு நடுவே இருந்தது, ராமமூர்த்தியின் குலதெய்வமான கங்கையம்மன் கோவில்!

ராமமூர்த்தியின் மனைவியும் மகளும் பொங்கல் வைக்க, மற்றவர்கள் உதவினர்! அவரது மகன், பூசாரியை அழைத்து, பூஜைப் பொருட்களை எடுத்து வைத்தார்!

ராமமூர்த்தி, தன் கையில் இருந்த பையை திறந்து 15 பவுன் நகைகளை எடுத்து, ஒரு மஞ்சள் துணியில் வைத்து, பூஜையில் வைத்தார்!

அங்கே......

லுங்கி கட்டிக் கொண்டு மரத்தடியில் அமர்ந்திருந்த ஒருவன், இவர் நகைகளை மஞ்சள் துணியில் வைப்பதையே பார்த்துக்கொண்டிருந்தான், அவனது இதழ்கள் சிறிது புன்னகையுடன் விரிய, போதையால் உண்டான மூர்க்கத்தனமும் அவன் முகத்தில் தெரிந்தது!

------------*----------------------------*-----------------

கோதை, தன் மகளை அவசரபடுத்தினாள். "சீக்கிரம் கிளம்புடி! சீனிவாச பெருமாள் திருக்கல்யாணம் நடக்கும்போது அதுல கலந்துகிட்டா, அந்த பகவான் அருளால சீக்கிரமே உனக்கும் ஒரு கல்யாணம் நடக்கும்! திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணைன்னு சொல்லுவாங்க! உனக்கு அந்த பகவான்தான் வழி காட்டணும்! போய், கண்குளிர கல்யாணத்த பாரு! நல்லா வேண்டிக்க? மனுசால நம்பறத விட்டுட்டு பகவான நம்பு! அந்த பகவான் அப்பவாவது கண் திறக்கறாரான்னு பாப்போம்! " எனக் கூற,

"சரிம்மா.... இதோ கிளம்பறேன்," என்றவள், இருப்பதிலேயே கொஞ்சம் நல்ல சேலையை எடுத்து கட்டிக் கொண்டு,

"சரிம்மா.... நான் வரேன்," எனப்புறப்பட,

"உங்க அப்பா கூட கோயிலண்ட தான் இருப்பாரு! வரும்போது அவர் கூட வந்துடு ," எனச்சொல்ல, ருக்கு நடக்க ஆரம்பித்தாள்!

ஊரின் வலது கோடியில் உயர்ந்த கோபுரத்துடன் இருந்தது பெருமாள் கோவில்! ருக்குவை போலவே மணமாகாத பெண்கள் நிறைய பேர் வந்திருந்தனர்!

கோவில் பட்டர், "கன்னிப் பெண்கள் எல்லோரும் பஜனை மடத்துக்கு போங்க! அங்க இருந்து சீர்வரிச தட்டுகள ஒன்பதுபேர் கொண்டு வரணும்! வாத்தியக்காரா காத்துண்டு இருக்கா, சீக்கிரம் போங்கோ," என்றார்!

ஒரு பெண் மணி, ருக்கு உட்பட அங்கேயிருந்த கன்னிப் பெண்களை அழைத்துக்கொண்டு பஜனை மடத்தை நோக்கி புறப்பட்டாள்.

வாத்தியக்காரர்கள் இசைக்கத் தொடங்கினர் சீர்வரிசை தட்டுகளை பெண்கள் எடுத்துக்கொண்டனர். ருக்கு எடுத்த தட்டில் வெற்றிலை, பாக்கு இருந்தது! வாத்தியக்காரர்கள்

முன் நடக்க, சீர்வரிசை ஊர்வலம் பெருமாள் கோவிலை நோக்கிப் புறப்பட்டது!

நாதஸ்வரம் வாசித்துக் கொண்டு வந்தவர், வானத்தை நோக்கி ரசித்தபடி ஊதினார். எதையோ பார்த்தவர் ஊதுவதை நிறுத்திவிட்டு, அப்படியே நிற்க..... ஊர்வலத்தில் வந்தவர்கள் அப்படியே நின்றனர்.

வானத்தில்...... கருடன் வட்டமிட்டது! எல்லோரும் "கிருஷ்ணா, கிருஷ்ணா" என பரவசத்துடன் கன்னத்தில் போட்டுக் கொள்ள....

ஒரு பெண், "கருடனோட கால்ல.... ஏதோ.... மஞ்சளா....." எனக் கூர்ந்து பார்த்தவாறு சொல்ல, பருந்தின் காலிலிருந்து விடுபட்ட மஞ்சள் நிறப் பொருள், நேராக ருக்குவின் தட்டில் வந்து விழுந்தது! எல்லோரும்ஆச்சரியத்தில் திளைக்க, ஒரு வயதான பெண்மணி ருக்கு விடம், "அடியே ருக்கு..... அந்த பகவானே பறந்து வந்து உனக்கு என்னத்தையோ போட்டிருக்கார், என்னன்னு பாரு!" என்றதும் எல்லோருமே ருக்குவை சூழ்ந்துகொண்டு ஆச்சரியத்துடன் பார்க்க... ருக்கு மெல்ல தட்டை வேறு ஒரு பெண்ணிடம் கொடுத்து விட்டு, அந்த மஞ்சள் நிற துணி முடிப்பை பக்தியோடு எடுத்து பிரிக்க, அதில் இருந்த நகைகள், சூரிய ஒளியில் மின்னின!

பார்த்த அனைவரது கண்களும் ஆச்சரியத்தில் விரிந்தன. சில கண்களில் பயமும் பதட்டமும் தெரிந்தது!

அந்தவயதான பெண்மணி, "ருக்கு, உன் அம்மா உனக்கு கல்யாணம் பண்ண வழி இல்லையேனு தவிச்சா.... அந்தக் கடவுளே கிருஷ்ணப்பருந்து ரூபத்தில் வந்து வழி காட்டிட்டான்: வா! வா..... சீனிவாச கல்யாணத்தை பார்த்துட்டு, உன் கல்யாண ஏற்பாடுகள கவனிக்கலாம்", எனக்கூற, சிலருக்கு பொறாமை இருப்பினும் ருக்குவுக்கு இறைவன் இட்ட பிரசாதம் என எண்ணி, ஆமோதித்தனர்!

ஊர்வலம் தொடர்ந்தது! கோவிலை அடைந்தனர். கோவில் பட்டரிடம் நடந்ததை எல்லோரும் சொன்னார்கள்! அவர், " எல்லாம் பகவான் கிருபை! சுவாமியை முழுசா நம்பி, சரணடைந்தவாளுக்கு அவரோட அனுக்கிரஹம் கண்டிப்பா கிடைச்சுடும்! அதுக்கு நம்ம ருக்குவே நல்ல உதாரணம்! இத நாம எல்லாரும் மனசார ஏத்துக்கணும்! யாருக்கு கொடுத்திருக்கார்?... தனக்கு ஒரு வாழ்க்க அமையுமா? நல்ல காலம் பிறக்குமானு ஏங்கிக்கொண்டிருந்த ஏழைக் குடும்பத்துக்கு தானே கொடுத்திருக்கார்! பகவான் ஒன்று பண்ணினா அதுக்கு ஆயிரம் அர்த்தம் இருக்கும்! எப்படியோ பகவத் கிருபை இவா குடும்பத்துக்கு கிடைச்சிருக்கு!.... சரி, நாழியாறது....." என்றவாறு பெருமாளின் திருக்கல்யாண வைபவத்தை நடத்த தொடங்கினர்.

தாயாரின் கழுத்தில் மங்கல நாண் பூட்டியாயிற்று! அனைவரும் பக்திப் பெருக்கோடு சேவித்து மகிழ்ந்தனர்!

முறுக்கு டின்னுடன் கோபாலனும் வந்து ஒரு ஓரத்தில் நின்று இருந்தார்! அவரது கவலை எல்லாம், "இன்னும் பாதி முறுக்கு விற்காமல் இருக்கிறதே", என்பதாக இருந்தது! முறுக்கு டின்னை கீழே கூட வைக்காமல் சீனிவாச பெருமாள்-பத்மாவதி தாயாரின் மாலை மாற்றும் சடங்கினை பார்த்தபடி இருந்தார்.

சடங்குகள் அனைத்தும் விமர்சையாக நடந்து முடிந்தது!

"என் மகளுடைய கழுத்தில் மங்கல நாண் ஏறுவது எப்போது?" என்ற வருத்தத்தோடு நின்ற கோபாலனிடம் வயதான பெண்மணி வந்து ருக்கு விற்கு நகைகள் கிடைத்த விபரம் சொன்னாள். மற்ற பெண்களும் அவர் அருகில் வந்து நடந்ததைச் சொல்ல, நம்ப முடியாமல் திக்பிரமை பிடித்தவர் போல் நின்றார்.

மஞ்சள் துணியில் சுற்றிய நகைகளோடு மௌனமாக வந்து நின்றாள் ருக்கு! கண்களில் கண்ணீர் தளும்ப மகளை நோக்கிய கோபாலன், "ருக்கு", என்றபடி அவள் கையிலிருந்த மஞ்சள் துணியை பார்க்க.... நிதானமாக சொன்னாள் ருக்கு, "அப்பா.... இது ஏதோ கல்யாணப் பெண்ணின் நகைகள் மாதிரி தெரியுது! இதை எப்படியோ தொலைச்சுட்டு இருக்காங்க! இது ஒரு வேளை கல்யாண நகையா இருந்தா... அவங்க மனசு என்ன பாடுபடும்?" என்று சொல்லி நிறுத்த,

உடனிருந்த பெண்மணி, "ருக்கு.... அப்படி நீ யோசிக்காத! உனக்காக, இதை பருந்து ரூபத்தில் கொடுத்தான்னு நெனச்சுக்கோயேன்!" என்றதும் குறுக்கிட்டு மறுத்த ருக்கு," வேண்டாம் மாமி.... ஒரு பெண்ணோட இழப்புல நான் என் வழிய தேடிக்க விரும்பல, அப்பா, இதை நாம இப்பவே போலீஸ்ல சேர்த்திடுவோம்",

என்றாள்!

கோபாலன் என்ன சொல்வதென்று தெரியாமல் குழப்பத்தோடு நின்றார். அப்போது அங்கு வந்த பட்டர், "கோபாலா! வறுமையில் இருந்தாலும் நல்ல மனசு உள்ள மகளைத்தான் பெற்றிருக்கற! நான் கூட ருக்கு கல்யாணத்துக்கு பகவான் வழிகாட்டிட்டான்னு தான் நெனச்சேன்! ஆனா, ருக்கு சொன்னபிறகு, இதன் மூலமா ஏதோ லீலை பண்ண போறான்னு தெரியுது! இவ சொன்னபடியே, போலீஸ் கிட்ட இத ஒப்படைச்சிடலாம், வாங்கோ", என்றார்!

ருக்கு, கோபாலன், பட்டர், சில பெண்கள் என நாலைந்து பேர் போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்றார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குள் இவர்கள் நுழைய, பெரியவர் ராமு மூர்த்தியின் குடும்பத்தினர் எல்லோரும் கண்ணீருடன் பரிதவிப்போடு நின்றிருந்தனர்.

ராமமூர்த்தியிடம் இன்ஸ்பெக்டர், "அவன எவ்வளவோ கேட்டுட்டோம்! நான் அந்த நகைகளை எடுத்துப் போனது உண்மைதான்! ஆனா, லுங்கிய கட்றதுக்காக அந்த குட்டி சுவத்து மேல அதை வச்சிட்டு மறுபடியும் எடுக்கலாம்னு பார்த்தா..... அத அங்க காணலன்னு சொல்றான்!" என்றார்!

கலக்கத்துடன் ராமமூர்த்தி, "ஐயா, அந்த நக கிடைக்கலன்னா, எம்பொண்ணு கல்யாணமே நின்னுடுமே! நாங்க என்ன பண்ணுவோம்?!..." என கதறினார்!

அதற்குள் கோவில் பட்டரைப் பார்த்த இன்ஸ்பெக்டர், "என்ன சாமி?..." என்று கேட்டதும், பட்டர், திருக் கல்யாண சீர்வரிசை ஊர்வலத்தில் நடந்ததைச் சொல்லி, ருக்குவிடம் இருந்த மஞ்சள் துணி சுற்றிய நகையை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தார்!

ஊர்வலத்தில் உடன் வந்த பெண்களும் ருக்குவிடம் நகை வந்து விழுந்த விதம் பற்றியும் நகைகளை தன் திருமணத்திற்கு பயன்படுத்திக் கொள்ளாமல் போலீசிடம் ஒப்படைக்க நினைத்தது பற்றியும் சொன்னார்கள்! இதைக்கேட்ட ராமமூர்த்தி, நெகிழ்ச்சியோடு ருக்குவின் கைகளை பற்றிக்கொண்டு, கண்ணீர் மல்க, "உன் மனசு யாருக்கும் வராதும்மா! உனக்கு அந்த கடவுள் நல்ல வாழ்க்கைய கொடுப்பான்! என் மகளோட வாழ்க்கையே உன் நல்ல மனசு போட்ட பிச்சைதான்!" என தழுதழுக்க கூறினார்.

நகையை களவாடிச் சென்றவன் நகை துணியை சுவரின் மீது வைக்க, பகவான் பருந்து ரூபத்தில் கொண்டு வந்து ருக்குவின் தட்டில் போட்டு இருக்கிறான் என எல்லோரும் உணர்ந்தனர்!

ஏன் இப்படி?...

தன் மகளின் வாழ்வில் ஒளி கொடுத்த ருக்குவை ராமமூர்த்தி, தன் மகனுக்கு மணம் பேசி முடித்தார்! ருக்குவை பெண் பேசி முடிக்க, கோபாலன் வீட்டுக்கு "கிருஷ்ணன் வந்தான்!" ஆம்!, ராமமூர்த்தியின் மகன் பெயர் கிருஷ்ணன்!

# கவலைகளை போக்கும்
# காளி வழிபாடு!!

~ திருவாரூர் சு.சேகர்.

காளி என்றாலே உக்கிரமான உருவமும், பயமும் தான் நம் மனதில் தோன்றும். இவர் சக்தியின் தச மகா வித்யாக்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். தீய சக்திகளை அழிக்க பராசக்தி எடுத்த அவதாரம் தான் காளி. இவரைப் பார்த்து பயப்பட வேண்டியதில்லை, இவர் அனுக்கிரக தெய்வம். காளியை உபாசிக்க ஆரம்பித்த பின், நாளடைவில் பயம் நீங்கி, அவரிடம் ஈடுபாடு ஏற்படும்.பக்தர்கள் மனமுருகி அன்போடு அழைக்கும் போது சாந்தமடைந்து அருள் புரிகின்றார்.

காளி தான் காலங்களை கட்டுபடுத்தக்கூடியவர் என்பது இந்துக்களின் நம்பிக்கை. காலம் கருநிறம் கொண்டது. அதே போன்று தேவியும் கருநிறம் கொண்டவர். இவர் உலகில் ஏற்படும் மாறுதல்களைக் குறிக்கின்றவர். அதனால் நாம் செய்யும் செயல்களை வெற்றி பெற காளி தேவி அருள்புரிகிறாள்.

### காளியின் உருவ அமைப்பு:

காளி, விரிந்த கூந்தல், நாற்கரங்கள், ஐம்பத்தோரு மாத்ருகா அட்சரங்களைக் குறிக்கும் வகையில் அதே எண்ணிக்கையில் மண்டையோடுகளால் ஆன கபால மாலையை அணிந்து, கோரைப்பற்கள் கொண்டு பயங்கரமாகக் காட்சியளித்தாலும் பக்தர்களைக் காப்பதில் அக்கறைக் கொண்டவர். தன்னை சரணடைந்தவரைக் காப்பதற்காக அபய, வரதம் தரித்தவர்.

ஆகம கிரந்தங்களில் காளி தேவியைப் பற்றி பல தியானங்கள் இருக்கின்றன. அவற்றில் பத்ரகாளி தியானம் அனைவராலும் சொல்லப்படுகிறது.

“ச்யாமாபாம் ரக்த வஸ்த்ராம் ஜ்வலா சிகயுதாம்
அஷ்டஹஸ்தாம் த்ரிநேத்ரம் சூலம் வேதாள கட்கம்
டமருக சகிதம் வாமஹஸ்தே கபாலம் அன்யே
கண்டாந்து கேடாம் அபய வரயுதாம் சாபஹஸ்தாம்
சுதம்ஷ்ட்ராம் சாமுண்டாம் பீமரூபாம்
புவன பயகரீம் பத்ரகாளீம் நமாமி!”

இந்த தியான விதிப்படி காளிக்கு எட்டு கைகள், மூன்று கண்கள், டமருகம், சூலம், கபாலம் கையில் ஏந்தியபடி, அபய வரத ஹஸ்தங்களுடன் காட்சி தருபவளாகச் சொல்லப்பட்டுள்ளது.

### காளியை வழிபட்டவர்கள்:

சிவன், பிரம்மா, விஷ்ணு, யமன், வருணன், வினாயகர், இந்திரன், சூரியன், சுக்கிரன், பிரகஸ்பதி போன்ற தேவர்களாலும், துர்வாசர், கச்யபர், சுகர், தத்தாத்ரேயர், பிருகு போன்ற ரிஷிகளாலும் அனுமன், பலி போன்ற சிரஞ்சீவிகளாலும் இராமன், பரதன், பரசுராமன் போன்ற அவதார மூர்த்திகளாலும் ஆராதிக்கப்பட்டவர்.

இராவணன், கார்த்தவீர்யார்ஜுனன் போன்ற மாமன்னர்களாலும் வணங்கப்பட்டவர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு காளி தேவி நேரில் காட்சியளித்து பேசியவர்.

காளியின் அருளால் ஆட்டிடையனாக இருந்தவர் உலகம் போற்றும் மகாகவி காளிதாசனாக மாற்றப்பட்டார்

கவிச் சக்ரவர்த்தி கம்பர், ஒட்டக்கூத்தர், வீர சிவாஜி, தெனாலிராமன் போன்ற பலரும் காளியின் அருள்பெற்றவர்களே.

### காளி வழிபாடு:

உடலில் பயத்தைப் போக்கி, மனோ தைரியத்தை வரவழைக்கும் காளி வழிபாடு பற்றி உத்தரகலாமிருதத்திலுள்ள ஒரு ஸ்துதி..

“காமேசஸ்ய ஸ்வாம பாக நிலயாம் பக்தாகிலேஷ்டார்த்ததாம்
சங்கம் சக்ர மதாசவயம் ச வரதம் ஹஸ்தைர் ததானம் சிவாம்
ஸிம்ஹஸ்தாம் சசிகண்ட மௌலி லசிதாம் தேவீம் த்ரிநேத்ரோஜ் வலாம்
ஸ்ரீமத் விக்ரம சூரிய பாலன பராம் வந்தே மகா காலிகாம்.”

பொருள்:

“காமேஸ்வரக் கடவுளின் இடது பாகத்தை அலங்கரித்திருப்பவளும், தன் பக்தர்கள் கேட்பதைக் கொடுப்பவளும், அவர்களைப் பாதுகாக்கின்ற

அடையாளமாகச் சங்கு சக்கரம் கொண்டு வரம் அளிப்பவளும், பிறை நிலவு தரித்து, பிரகாசமாக விளங்கும் முக்கண்களோடு, சிங்கத்தின் மீது அமர்ந்து அழகு உருவமாகக் காட்சி தருபவளும், சூரிய வம்சத்தில் பிறந்த விக்ரமார்க்க அரசனைக் காத்து நன்மை தருவதில் அக்கறை உடையவளுமான காளிதேவியை வணங்குவோமாக!'

## புராணங்களில் காளி:

மகா காளி ரூபம், ஆதி பராசக்தியின் தாமஸ குண பிரதிபலிப்பு ஆகும் என்று புராணங்கள் உரைக்கின்றன. சிவ பெருமானின் இடப் பாதி ஆகிய பராசக்தியின் காளி அவதாரம் குறித்து, மத்சய புராணம், தேவி பாகவதம், கந்த புராணம் ஆகியன கூறுகின்றன. இவரைப் பற்றி அதர்வண வேதங்களிலும், தேவி மகாத்மியத்திலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இவரை வழிபடும் முறைகள் பல மந்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது. நம் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் மந்திரங்களைக் கொண்டுள்ள தேவி மகாத்மியத்தில் சத் - மகாலக்ஷ்மி என்றும், சித் - சரஸ்வதி என்றும், ஆனந்தமே மகாகாளி என்றும் கூறப்பட்டுள்ளது. ஆற்றலே வடிவான காளியைச் சரணடைந்தால், அவள் நம் பாவங்களையெல்லாம் பொசுக்கி, நாம் நம் லட்சியத்தை அடையச் செய்கிறாள்.



விஸ்வாமித்ர மகரிஷி அருளிய துதியில், ஆதிகாளி, தட்சிணகாளி, க்ரீம்காளி, ஸ்திதி காளி, பத்ரகாளி, மதுகைடப சம்ஹார காளி, குஹ்ய காளி, வர காளி, சதுர்புஜ காளி, நடன காளி என்ற பத்து காளி வடிவங்கள் சொல்லப்பட்டுள்ளன.

தேவி மகாத்மியத்தின் அடிப்படையில் காளியின் வழிபாடு என்பது போர் புரிவோர் நிறைவேற்றும் வழிபாடாகவே கூறப்பட்டுள்ளது.

சும்ப, நிசும்ப என்ற அரக்கர்களைத் துர்க்கை வீழ்த்திய போது காளி இருமுறை தோன்றியதாகக் குறிப்பிட்டுள்ளது. துர்க்கை சினமுற்ற நிலையில் காளி, துர்க்கையின் நெற்றியிலிருந்து கரிய நிறத்துடன் கபால மாலை சூடி கட்டுவாங்கம் ஏந்தி, புலித்தோல் ஆடை அணிந்து தொங்கவிடப்பட்ட நாக்குடன் வெளிப்பட்டதாகவும், இரத்தபீஜன் என்ற அரக்கன் கொல்லப்படும் நிலையில் அவனின் இரத்தத் துளிகள் மீண்டும் மீண்டுமாக உருப்பெற்றது. அந்த இரத்தத்தைக் காளி குடித்ததாகப் புராணங்களில் விளக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இலக்கியங்களில் காளி:

சிலப்பதிகாரத்தில் கொற்றவை, அமரி, குமரி,கௌரி, அய்யை, சூலி, நீலி, கலையமர் செல்வி, விண்ணோர் பாவை போன்ற பெயர்கள் துர்க்கை மற்றும் காளியைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஓரிடத்தில் பாண்டியனின் அரண்மனையில் நின்ற காட்சியை வாயிற் காப்போன் கூறும் போது கண்ணகி என்ற பெண், துர்க்கை மற்றும் காளியைவிடச் சினம் கொண்டவளாக உள்ளாள் என்று கூறினான்

காளி என்பவள் சப்தமாதர்களில் இளையவள் என்றும், வனத்தில் உறைபவள் என்றும் சிலப்பதிகாரக் குறிப்புகள் உள்ளன. மேலும், இடுகாட்டில் காளிக்காக ஓர் கோயில் அமைக்கப்பட்டிருந்தது என்றும், 'காடமர் செல்வி' என்ற பெயரும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது. பெரும்பாலும் இலக்கியங்களில் காளி, 'மயான வாசினி' என்று வர்ணிக்கப்படுக்கின்றார்.

தமிழ் சங்க இலக்கியங்களான திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ள 'பழையோள் குழவி' என்பது காளியைக் குறித்திடும் சொல்லாக உள்ளது. நச்சினார்கினியர் காளியைப் 'பழையோள்' என்று கூறியுள்ளார். அகநானூற்றில் இடம்பெற்றுள்ள "கானமர் செல்வி"யும் கலித்தொகையில் கூறப்பட்டுள்ள "பெருங்காற்று கொற்றை" என்ற சொல் காளியை கி.பி 11ஆம் நூற்றாண்டு மற்றும் கி.பி 12ஆம்

நூற்றாண்டில் ஜெயங்கொண்டாரால் எழுதப்பட்ட கலிங்கத்துப்பரணி காளி புகழ் பாடும் இலக்கியமாகும்.

காளி கோயில்கள்:

அக்காலத்து மன்னர்கள் பலர் காளிக்கு பல கோயில்களைக் கட்டி வைத்துவிட்டுப் போயிருக்கின்றனர். பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் காளி மற்றும் துர்க்கைக்கு எனத் தனிக் கோயில்கள் உருவாக்கப்பட்டன. குறிப்பாக முதலாம் ஆதித்தன் காலத்தில் பழுவேட்டரையர்களின் பழுவூர் என்ற ஊரின் தென் பகுதியில் காளிக்கென்று தனிக்கோயில் உருவாக்கப்பட்டது. இதில் காளி எட்டு கைகளுடன் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. படிமத்தில் ஓர் கால் அரக்கனின் மீது ஊன்றப்பட்டு ஜீவாலா கேசத்துடன் காணப்படும் இப்படிமத்தின் கையிலுள்ள திரிசூலம் வீசப்படும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சமகாலத்தில் திருவக்கரையில் காளியின் படிமம் வைக்கப்பட்டுள்ளது. பொதுவாக விஜயாலயன் காலம் தொடங்கி சோழர் கால ஊர்களின் எல்லைப் பகுதியில் காளிக்கென்று தனிக்கோயில்கள் எழுப்பப்பட்டன.

காளி வழிபாடு:

நமது உடலில் நரம்புமண்டலத்துக்கு அதிபதியாகத் திகழும் காளியை வழிபட்டால், எதிர்ப்புகள் எல்லாம் இல்லாமல் போவதுடன், எண்ணிய எண்ணங்கள் நிறைவேறி சந்தோஷ வாழ்க்கை அமையும். தென் திசைக் காவலனாக விளங்கும் எமதர்மராஜன் காளி என்ற பெயரைக் கேட்டால் விலகி ஓடி விடுவான். தேஜஸ்வினீ, பராசக்தி, பரப்பிரம்ம சொரூபிணி, மோட்சதா, திகம்பரா, சித்விலாசனி, சின்மயி ஆகிய நற்பெயர்களைக் கொண்டவள் காளி.

காளியை வழிபட்டு அவளது அருளை பெற பூஜை முறைகள் சொல்லப்பட்டிருந்தாலும் அவளது நாமாவளியை சொன்னாலே போதும் மகிழ்ந்து அருள் புரிவாள் காளி. காளி கவசம், காளி கீலக ஸ்தோத்ரம், காளி அர்க்களா ஸ்தோத்ரம் என்று பல ஸ்தோத்ரங்கள் உள்ளன.

சகல சித்திகளையும் அருளும் பத்ரகாளி மந்திரம்
“ஓம் ஸ்ரீ மஹாகாளி மஹாலக்ஷ்மி
மஹா கன்யா ஸரஸ்வதீ தேவ்யை நமோ நமஹ:”

காளி காயத்திரி மந்திரம்.
“ஓம் காளிகாயை ச வித்மஹே
ஸ்மசான வாசின்யை தீமஹி
தன்னோ கோரா ப்ரசோதயாத்”

செவ்வாய்க்கிழமை காளிதேவியை வழிபடுவதற்குரிய ஒரு சிறந்த தினமாகும். அன்றைய தினத்தில் ராகு கால நேரத்தில் அருகில் உள்ள அம்மன் கோவிலுக்கு சென்று நெய் அல்லது விளக்கெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடுவதன் மூலம் பிரச்சினைகள் தீரும், கஷ்டங்கள் நீங்கும் கவலைகள் மறையும்.
ஓம் சக்தி! பராசக்தி!!




SWASASUGAM
SYRUP
For Clearing Respiratory Tract
Call: 88702 88701

# தெளிவை நோக்கி....

~ சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்.



மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு அடிப்படை வழிகாட்டியாக அமைவது வாழ்வியல் தத்துவங்கள்!

இந்த தத்துவங்களில் முதலில் நமக்குத் தெளிவு இருத்தல் வேண்டும்.

ஒருவர் வருத்தமாக இருக்கிறேன் என்கிறார் ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்கிறார் இரண்டுமே மனதைப் பொறுத்த விஷயம் திருப்தி என்ற ஒன்றை அடைந்து விட்டால் எதுவுமே நம்மை வீழ்த்தாது.

ஆசையின் உச்சமே மனித வாழ்வின் துன்ப வாயிலின் திறவுகோல்!

ஆசை தீர என்று வாழ்வது வாழ்வன்று ஆசை ஒருநாளும் தீரப்போவது இல்லை அலைச்சல் தான் கண்ட பலன்.

அன்பு, இயற்கை, எளிமை இவை இறைவனின் அடையாளங்கள்! உள்ளத்தில் அமைதி வேண்டும்! நிம்மதியை நித்ய சந்தோஷத்தை தேடி நாம் எங்கெங்கோ செல்கின்றோம் உண்மையில் நாம் தேடிக்கொண்டிருக்கும் ஆனந்தமும், நிம்மதியும் நம் உள்ளத்தில் தான் இருக்கிறது.

சித்தர் ஒரு நாள் காலையில் ஒரு சிறிய ஊசியைச் தொலைத்து விட்டேன் என்றார். அவர் தெருவில் குனிந்து தேட ஆரம்பித்து விட்டார். அவர் தேடுவதை பார்த்து அவருக்கு உதவ சிலர் முன் வந்தனர்.

சுவாமி ஊசி எங்கே விழுந்தது? என்று சொல்ல முடியுமா? என்று கேட்டதும் அதற்கு சித்தர், ஊசியை ஒரு அடியார் வீட்டில்தான் தொலைத்து விட்டேன் என்றார் அந்த சித்தர் அமைதியாக.

அருகே இருந்தவர்கள் திகைத்துப் போனார்கள். அடியவர் வீட்டில் தொலைத்த ஊசியை தெருவில் தேடினால் எப்படிக் கிடைக்கும் சுவாமி?
நீங்கள் மிகப்பெரிய சித்தர் இப்படி செய்யலாமா என்றனர்.

அதற்குச் சித்தர் - நீங்கள் எல்லோரும்

எப்படி செய்கிறீர்களோ அதைப் போலவேதான் நானும் செய்கிறேன் என்றார் சித்தர் நிதானமாக.

நாங்கள் எந்த ஊசியையும் எவர் வீட்டிலும் தொலைக்கவில்லை. தெருவிலும் உங்களைப்போல தேடவும் இல்லை என்றனர் சிரித்தபடி.

உடனே சித்தர் அமைதியான குரலில், மன அமைதியும், சந்தோஷமும் மனதிற்குள்ளே தான் இருக்கிறது அப்படி இருக்க நீங்கள் எல்லோருமே அதை வெளியில் தானே தேடி காலத்தையும், திறமையையும் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்றார் அந்த சித்தர்.

தெளிவு பெற்ற அடியவர்கள் சித்தரை வணங்கினர்.

அழகான கண்ணாடி தான் நம் வாழ்க்கை. நான் என்ற அகந்தையே அழுக்குத்துணி வாழ்க்கை எனும் அழகான கண்ணாடியில் தேவையற்ற தீய எண்ணங்களை படிய விடலாமா? அவை தீய செயல்களுக்கான வழிவகை செய்து விடும் அல்லவா?

அழுக்குத் துணியால் கண்ணாடியை தூய்மை செய்ய முடியாது.

நல்ல எண்ணங்கள் என்ற நல்ல சுத்தமான துணியால் தான் மனம் என்னும் கண்ணாடியை அழகாக துடைக்க முடியும். அப்போதுதான் நம் முகம் தெளிவாகத் தெரியும். எதுவும் நிரந்தரம் இல்லை. எதுவும் மாறும் மாறாதது இறைவன் மட்டுமே.

நிலையாமையே நிலையானது என்பதை உணர்தல் வேண்டும்.
நாம் வெறும் கருவிதான் பெரும் பிறவி அல்ல. நாயினும் கடையேன் என்று ஆன்றோர்களே சொல்லும்போது நாம் எவ்வளவு அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்; சிந்தியுங்கள்!
இந்தப் பிரபஞ்சம் இறைவனால் படைக்கப்பட்டது.

இந்தப் பிரபஞ்சத்தில் உதித்து, உதிரும் வரையில் இறை வழிபாடு செய்வோம். நலிவுற்ற அடுத்தவருக்காக பிரார்த்தனை செய்வோம். இந்தப் பிரபஞ்சமே நமக்காக பிரார்த்தனை செய்யும்.



Special Birthday Ritual Packages for You

Get 40% OFF

Call: 88702 88701

# ஆன்மீக கேள்விகளும்? அர்த்தமுள்ள பதில்களும்...

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்

### சந்திர தோஷம் போக்கும் பரிகாரம் உள்ளதா?

இந்த தோஷமுடையோர், திங்கட்கிழமைகளில் விரதம் மேற்கொண்டு, திங்களூர் தலஞ்சென்று, ஆலயக் கோவிலருகே உள்ள சந்திரபுஷ்கரணியில் ஸ்நானம் செய்து, சந்திர பகவானுக்கு உகந்த வெள்ளை அரளி பூவை வைத்து, பச்சரிசிப் பொங்கல் அல்லது அந்த அரிசியும் வெல்லமும் சேர்ந்த காப்பரிசியை நைவேத்தியம் செய்வதுடன் சந்திரனுக்கும், மூலவருக்கும் வெள்ளாடை சார்த்தி உளமார வணங்க வேண்டும் என்பது நியதி.

இப்படிச் செய்தால் சந்திரதோஷத்துடன் அனைத்து தோஷங்களும் நீங்கி வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைக்கும் என்பது ஐதீகம்.

### விதவிதமான இறை அபிஷேகங்கள் உண்டு என்கிறார்களே?

இதோ சில அபிஷேகங்கள்:

சீர்காழி தல சட்டநாதருக்கு புனுகு சாத்தி அபிஷேகம்.

வெந்நீரால் அபிஷேகிக்கப்படுபவர் தேவிகாபுரத்தில் குடியேறியுள்ள கனக கிரீஸ்வரர்.

வைகாசி கடைசி வெள்ளிக்கிழமையில் திருச்சி உறையூரில் உறையும் வெக்காளி அம்மனுக்கு மாம்பழ அபிஷேகம்.

தக்காளி சாறு கொண்டு காரைக்குடி முத்து மாரியம்மனுக்கு பங்குனிப் பெருவிழாவில் அபிஷேகம் செய்விக்கப்படுகிறது.

வித்தியாசமாக கேரள மாநில கொடுங்கலூர் பகவதி அம்மனுக்கு "தவிடு அபிஷேகம்' நடத்தப்படுகிறது.

### பிரம்மாண்டமான தாமரைக் கோயில் எங்குள்ளது?

திருவனந்தபுரத்திலிருந்து வடக்கே சுமார் 20 கி.மீ. தூரத்தில் போத்தன்கோடு என்ற எழிலான இடமுள்ளது. அது அடர்ந்த மரங்களால் சூழப்பட்ட வனப்பகுதி.

இவ்வூரில் உள்ள சாந்தகிரி ஆசிரமம் கருணாகுரு என்பவரால் 44 ஆண்டுகளுக்கும் முன்பு உருவாக்கப்பட்டது.

இங்கேதான் உயர்ந்த மார்பிள் கற்களால், 91 அடி உயரமும், 84 அடி சுற்றளவும் கொண்ட வெண்தாமரை உருவாக்கப்பட்டு பார்ப்பவர்களின் கண்களுக்கு விருந்தாகிறது. இப்பூவில் மேல்நோக்கி பனிரெண்டு இதழ்களும், கீழ்நோக்கி ஒன்பது இதழ்களும் உள்ளன. தவிர, மேல்நோக்கிய இதழ்கள் கொண்ட உயரம் 41 அடியாகவும், கீழ் நோக்கிய இதழ்களின் உயரம் 31 அடியாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. இதனைக் கட்ட தேவையான கற்கள், அதற்கென பிரசித்திப் பெற்ற ராஜஸ்தான் மாநில மக்ரானா என்ற இடத்திலிருந்து தருவிக்கப்பட்டவை. தியானம் செய்ய ஏற்ற கோயில் இது.

### மருதமரம் கொண்ட சிறப்பென்ன?

அதிகப் பருமனும், உயரமுமுடையது மருதமரம். ஆற்றுப் பகுதிகளில் செழிப்பாக வளரக் கூடியது. எந்தப் பருவத்தாலும் பாதிக்கப்படாத இம்மரத்தை அர்ஜுனா என்றும் அழைப்பார்கள். பல ஆலயங்களில் தல விருட்சமாகக் காணப்படும் மருத மரத்தின் சிறப்பு குறித்து 'விருட்ச ஆயுர்வேதம்" என்ற நூலில் அதன் ஆசிரியர் சுரபாலர் ஏழு இடங்களில் சிறப்பாகக் கூறியுள்ளார்.

சுவாதி நட்சத்திரக்காரர்களுக்குரிய இந்த விருட்சம் முக்கியத் தலங்களான ஸ்ரீசைலம், திருவிடை மருதூர், திருப்புடைமருதூர் ஆகியவற்றில் தல மரமாக உள்ளது. இன்னும் சில ஊர்களிலும் இந்த மரம் தலவிருட்சமாக உள்ளது. இதய நோய் உடையோருக்கு பிரார்த்தனை மரமாகும் மருதமரம்.

### "முயலகன்" யார்?

ஒரு சந்தர்ப்பத்தில் ஆணவங் கொண்ட தாருகாவனத்து முனிவர்கள் சிவபிரானையே எதிர்த்து தீய நோக்கில் பெரிய யாகத்தைச் செய்தனர். அதிலிருந்து பல பாணங்கள், பொருட்கள் இத்தோடு முயலகன் என்ற கொடிய அரக்கனும் வெளிவந்தான்.

யாகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அனைத்துப் பொருள்களையும் பரமேசுவரனுக்கு எதிராக அம்முனிவர்கள் பிரயோகம் செய்தனர். அத்தனையும் இறைவனால் அடக்கப்பட்டது. கடைசியில் மனஞ்சோர்ந்த முனிவர்கள் முயலகனை சிவபெருமானிடம் ஏவி விட்டனர். அவனையும் இறைவன் அடக்கி தன் திருப்பாதங்களின் அடியில்

சேர்த்து விட்டார்.
முயலகன் அறியாமை எனும் அஞ்ஞானத்தைக் குறிக்கும் அரக்கனாகி, அவன் இன்றும் நடராஜர் அல்லது தட்சிணாமூர்த்தி இறைவடிவின் காலடியில் கிடப்பதைக் காணலாம், ஆலயங்களில்.
வடமொழியில் முயலகனை அபஸ்மாரம் (தமிழில் தீயக்குணமுடையோன்) என்பார்கள். காக்கை வலிப்பு நோய்க்கு முயலகன் என்ற பெயருமுண்டு.

### திருநாகேசுவரம் நாகநாதர் கோவிலில் ஆலயத் திறப்புக்கு முன்னர் அர்ச்சகர் கதவைத் தட்டுவார் என்கிறார்களே?

உண்மைதான். நாகநாதர் ஆலயத்தில் தினமும் இரவு நடைசாத்தப்பட்டவுடன் நாகராஜர் பாம்புருவில் வந்து காவல் காப்பதாக ஐதீகமுண்டு. எனவே எச்சரிக்கையாக ஆலய அர்ச்சகர் ஆலயக் கதவுகளை லேசாகத் தட்டிய பிறகே நடை திறப்பைச் செய்வார்.

### துர்வாச முனிவரை, ஒரு ஆபத்து காலத்தில் தெய்வங்களும் கைவிட்டதாக கூறப்படுகிறதே, எதனால் அப்படி?

அக்காலத்தில் நாபாகன் என்பவரின் புத்திரரான அம்பரீஷர் ஏழு தீவு கொண்ட நாட்டை ஆண்டு வந்தார். மகாவிஷ்ணுவின் தீவிர பக்தரான இவர் தினமும் அப்பெருமாளின் பிரசாதம் மட்டும் உண்டு வருவார்.
அந்த மன்னர் ஏகாதசி விரத நாட்களில் முழுப் பட்டினி விரதமிருந்து மறுநாள் த்வாதசியன்று காலையில் யமுனா நதியில் ஸ்நானஞ்செய்து, பூஜை, தானம் இவைகளை முடித்து, பிறகு காலைப்பொழுதில் சுண்டைக்காய், நெல்லிக்காயுடன் சேர்க்கப்பட்ட உணவைச் சாப்பிடுவார். திருமாலின் சக்கரம் இவருக்கு காவலாக இருந்தது.
ஒரு சமயம், ஏகாதசி விரதம் முடித்து மறுநாள் துவாதசி திதியில், விரத முடிவிற்கு முன்பு செய்ய வேண்டிய அனைத்து சடங்குகளையும் செய்துவிட்டு, உணவருந்த அம்பரீஷர் எண்ணிய நேரத்தில் அங்கு அதிதியாக வந்து சேர்ந்தார் கோபக்கார துரவாச முனிவர்.
அவரை மன்னர் முறைப்படி வரவேற்று உபசரிக்கையில், துர்வாசர் "நான் நீராடி வந்துவிட்டு உண்கிறேன்" எனக் கூறிவிட்டுப் புறப்பட்டுப் போனார். அவர் வரத் தாமதமானது.
த்வாதசித்தி முடிய கொஞ்ச நேரமே இருந்ததால் மன்னர் தவித்துப் போனார். திதி நேரத்திற்குள் உணவருந்தாவிடில் அது தோஷமாகி விடும்; ஆனால் துர்வாசர் இன்னும் வரவில்லையே?
அதிதி இருக்க உணவுண்டதால்தானே குற்றம்; வெறும் ஜலத்தை உண்டு விரதம் முடிப்போம் என்று முடிவு செய்து அம்பரீஷர் நீரையருந்தி விரதத்தை முடித்து விட்டார்.
அச்சமயம் அங்கு வந்த துர்வாசர்தான் கொண்ட இயல்பான கோபத்துடன் "நான் வருவதற்கு ஏன் விரதம் முடித்தாய்?" எனக் கூறி மன்னனை சாபமிட தன் கையை உயர்த்திய போது பகவானின் சக்கரம் அதனைத் தடுத்து முனிவரைத் தாக்கும் பொருட்டு துரத்த ஆரம்பித்தது.
இதிலிருந்து தப்பிக்க துர்வாசர் கைலாயம் ஓடினார். ஆனால், "என்னால் இயலாது" என சிவன் கையை விரித்து விட்டார். எனவே பிரம்மலோகம் ஓடிய துர்வாசரை பிரம்மனும் காக்க முடியாது என மறுத்துவிட, "பெருமாளே உன் கதி" என அவர் விஷ்ணுலோகம் போனார். போகுமிடமெல்லாம் சக்கரம் துரத்திக் கொண்டே போனது.
யார் சரணாகதி ஆனாலும் காக்கும் விஷ்ணுவோ, "என் பக்தர்களுக்கு நான் அடங்கியவன்; நான் உதவ இயலாது. உம்மைக் காத்துக் கொள்ள பக்தர் அம்பரீஷனிடமே செல்லுங்கள்" எனப் பணிக்கவே, வேறு வழியின்றி துர்வாசர் அம்பரீஷனிடம் திரும்பி வந்து மன்னிப்பு கோரினார். பெருந்தன்மையுடன் அம்மன்னன் மகாவிஷ்ணுவின் சக்கரத்தை துதிக்கவே, அது அகன்று விட்டது.
பக்தனுக்கு அருளும் பரந்தாமனின் பண்பை அன்று துர்வாசர் உணர்ந்தார்.

### ஆழ்வார்கள் முதன் முதலாகப் பாடிய திவ்ய தேசம் எது?

பஞ்ச கிருஷ்ண தலங்களில் ஒன்றும், திருவிக்ரம அவதார தலமாயும் உள்ள திருக்கோவிலூரே அது.
அருள்மிகு புஷ்பக வல்லித்தாயார் சமேத திரி விக்ரமன் இத்தலத்தில் சேவை சாதிக்கிறார்.
இங்கே பெருமாள் தன் ஒரு காலைத் தரையில் ஊன்றி மறுகாலை விண்ணை நோக்கித் தூக்கிய நிலையிலும், இடக்கையில் சக்கரம், வலக்கையில் சங்கு ஏந்தி, கிழக்கு நோக்கி திவ்ய தரிசனம் தர, இவருக்கு தேகளீசன் எனும் திருநாமமுண்டு.
பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவர் பெருமாளுக்கு மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். மூவருமே திருவிக்ரமனின் தரிசனம் பெற்றுள்ளனர்.

# மகத்தான மகான்!

~ தங்க புத்திரன்

“தவ வலிமையால், தன்னுடைய உயிர், தான் என்னும் பற்றும், அகங்காரமும் நீங்கப்பெற்றவனை மற்ற மக்கள் எல்லாம் தொழுவர்“ என்ற பொருளை அடக்கிய திருவள்ளுவரின் வாக்காக இக்குறள் அமையும்.

“தன் உயிர் தான், அறப் பெற்றானை ஏனைய மன் உயிர் எல்லாம் தொழும்” ( குறள் 268) என்று, இத்தகைய தவசீலர்களில் ஜனங்களால் இன்றும், போற்றப் படுபவர் ஆவார் பகவான் ரமணரிஷி அவர்கள். அந்த பகவானுடன் தொடர்புள்ள அத்தனை நிகழ்வுகளுமே பக்தனுக்கு, இறை உணர்வையும், நல்லொழுக்கத்தையும், வாழ்வின் நெறிகளையும் புகட்டுவதுமாகவே அமையும்.
அத்தகைய சம்பவங்கள் சிலவாக இவைகள் உள்ளன.

அண்ணாமலையாருக்கு “அரோஹரா!” எப்பொழுதும் தன் சிந்தனையில் புகுந்து குடைந்து கொண்டிருந்த திருவண்ணாமலையை நோக்கி புறப்பட்டு விட்ட இளம்வயது வெங்கட்ராமன் கடந்த 1896 ம் ஆண்டின் செப்டம்பர் முதல் தேதியன்று ஆம்பூர் புகைவண்டி நிலையத்தில் தன்னந்தனியே ரயிலிலிருந்து இறங்கி விட்டான். அவன் மனமோ” அருணாசலா, அருணாசலா” என ஓயாமல் புலம்பிக் கொண்டிருந்ததால், தன் இல்லம் விட்டு எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்ட குற்ற உணர்வு துளிக்கூட இல்லை அப்பையனுக்கு.

முன்பின் தெரியாத திருவண்ணாமலையில் சிவாலயம் எங்கு உள்ளது என கண்ணில் பட்ட ஆங்காங்கே அரிதாக தென்பட்ட மனிதர்களை கேட்டுக் கொண்டே நடந்தான் அவன்.
வேங்கடராமன் அன்று அறியாத ஒரு தகவல், இன்றைய கொரோனா கொடிய வியாதி போல அக்காலகட்டத்தில் பிளேக் எனும் தொற்றுநோய் தமிழகப் பல நகர்கள் மற்றும் திருவண்ணாமலையிலும் பரவியிருந்தது தான். உயிருக்கு பயந்து போன உள்ளூர்வாசிகள், பாதிக்குமேல் அச்சமயம் வெளியூருக்கு சென்று விட்டார்கள்.

அருணாசலேஸ்வரர் திருக்கோயிலை அடைந்து விட்ட வெங்கட்ராமன், வெறிச்சோடிக் கிடந்த ஆலயத்தினுள் பகுதிகளைத் தாண்டி விரைந்து ஈஸ்வரனின் கருவறையை அடைந்து விட்டான். அவனுக்கு வழி காட்டவோ, தடுக்கவோ ஒரு நபர் கூட இல்லாத ஒரு சூழ்நிலையில், லிங்க வடிவில் திகழ்ந்த ஈசுவரனை தரிசித்த மாத்திரத்தில், பிரிந்து சென்ற ஒரு கன்று பல நாட்கள் கழித்து தன் தாயைப் பார்ப்பது போன்ற பரவச நிலையை அடைந்துவிட்ட சிறுவன் “அப்பா! வந்துட்டேன் வந்துட்டேன் உன் ஆக்ஞைபடி” என கதறியவாறே, பரமேஸ்வர லிங்கத்தைக் கட்டிக்கொண்டு மெய்சிலிர்த்துப் போனான்! அத்துடன் அவனைப் பற்றிக் கொண்டிருந்த குடும்பப் பாசம் இதர கட்டுகள் தளர்ந்து விழுந்த ஒரு முழு யோகியாகிவிட்டான் முன்னாள் வேங்கட ரமணன் என்ற திருச்சுழிவாசி.

உறவுகளின் மீது பற்றற்றுப் போன வேங்கடராமன் ஒரே பற்றுக்கு உள்ளாகி விட்டான் அதுதான் அருணாசலேஸ்வரர் மீது கொண்ட ஈஸ்வர பக்தி!
“அவன்” தான் அடக்கம்!
அன்று பகவான் ரமணர் ஏராளமான பக்தர்களுக்கு தரிசனம் அளித்துவிட்டு ஏகாந்தமாக இருந்த சமயமது. அனைத்து பக்தர்களும் அங்கிருந்து கிளம்பி விட்டனர், ஒரே ஒரு பக்தரைத் தவிர.

அந்த பக்தரைப் பார்த்து ரமணர் கேட்டார்” ஏன் நீ புறப்பட வில்லையா? ஏதாவது உனக்கு வேணுமா என்கிட்டயிருந்து?
இதனால் தைரியமுற்ற அந்த பக்தர்
“சுவாமி! எனக்கு எந்த ஆசையும் இல்லை ஒன்னே ஒன்னு தான் நெஞ்சிலே இருக்கு....” எனக்கூறி தயங்கி நின்றார்.
“..என்ன சொல்”!
“பகவானுடைய திருப்பாதங்களின் மீது என் தலையை வைத்து நமஸ்கரிக்கணும். அவ்வளவுதான்”!
“சரி! உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்றியா? ”

"ஓ" பலமாக தலையாட்டி பதில் சொன்னார் பக்தர்.

"சிரசு என்பது எது... பாதம் என்பது எது? சொல்லேன்?" பகவானின் இந்த கேள்விக்கு விடை தெரியாமல் விழித்தார், அவர்.

"தெரியலையா?" தான் "என்பது எங்கு அடங்குகிறதோ அதுதான் பாதம்"

"சுவாமி! இப்போ தெரிஞ்சுது. ஆனா அந்த நாள் எங்கே இருக்குன்னு எனக்கு தெரியாதே"?

"இப்போ தெரிஞ்சுக்கோ!

அது எங்கேயும் இல்லை, இருக்கறது நமக்குள்ள தான்!

"நான், நான்" அப்படி நம்மகிட்டபொங்கி வருதுல்ல அந்த அகம்பாவம் தான் தலை! இப்படி வர அகம்பாவம் எங்கு ஒடுங்கறதோ அதுதான் ஒரு குருவோட பாதம். புரிஞ்சுதா?"

பகவான் இப்படி அருளவே, அந்த பக்தர் பூரண தெளிவு பெற்று அந்த குருவை அவரது பாதத்தில் தன் சிரசு படாமல் ஜாக்கிரதையாய் நமஸ்கரித்து விடைபெற்றார்!

பகவான் ரமணர் அருளியுள்ள இப்பாடலில் "நான்" என்பது பற்றி அருளுவார்.

அகமுகமார் அந்த அமல மதி தன்னால் அகம் இது தான் எங்கு ஏறும் என்று ஆய்ந்து அக உருவை நன்கு அறிந்து முந்நீர் நதிபோல ஓயுமே உன் கண் அருணா சலசன ஓர்!"

(அருணாசல பஞ்சகம்)

உன் முகமாகத் திருப்பப்பட்ட தூய்மையான அறிவால் "அஹம்" அல்லது நான் என்னும் உணர்வு எங்கிருந்து எழுகின்றது என்றும் ஆராய்ந்து, உண்மையான தன் ஆன்ம ஸ்வரூபத்தை யார் உணர்கிறானோ அவன் கடலில் நதி கலப்பது போல், அருணாசலனான உன்னிடம் ஒதுங்கி விடுவான் என்பது இப்பாடலின் திரண்ட கருத்தாகும்.

த்வைத அப்பளமும், அத்வைத அப்பளமும்

சரணர் ரமணரின் முன்னாலேயே அம்மா.... தன் பிள்ளை பாசபந்தம் அப்பாற்பட்ட நிலைமையை அடைந்து விட்டது அறிந்தும், அவ்வப்பொழுது அவருக்கு அஞ்ஞானம் தலையெடுக்கும்.

ரமணாசரமத்திலேயே தங்கிவிட்ட அந்த அன்னை, ஆசிரமவாசிகளுக்கும், சரணருக்கும் உணவு தயாரிக்கும் பணியை விரும்பி ஏற்றுக் கொண்டிருந்தார்.

பூர்வாசிரமத்தில் ரமணர் விரும்பி சாப்பிடும் இரட்டை அப்பளத்தை தயாரிக்க விரும்பின தாயார், அவர் உறங்குகையிலேயே அப்பளத்தை இட்டுவிட உத்தேசித்திருந்தாள்.

எல்லாம் அறிந்த ஞானிக்கு இந்த விஷயமும் தெரியாமலா போய் விடும்!


அன்று சரணர் கண்ணை மூடி திண்டில் சாய்ந்திருந்தார். அன்னைக்கு அவர் தூங்குகிறார் என்ற எண்ணம், உடனே மளமளவென அப்பளம் தயாரிக்கும் வேலையில் இறங்கி விட்டார்.

வெளியே சென்று தான் எண்ணிய காரியத்தை முடிக்கும் வகையாக, இந்த அப்பள பாட்டை உருவாக்கினார், பகவான்.

"மோன முத்திரையாகு(ம்) முடிவில்லா பாத்ரத்தில்
ஞானாக்னி யாற் காயும் நற் பிரம்ம
நெய்யதில் "நான்- அது" வாகவே பூஜிக்கத்
தன்மய- அப்பளமிட்டுப்பாரு! - அத்தைச்
சாப்பிட்டுன் ஆசையைத் தீரு! " என.

இப்பாட்டின் பொருள் இது-

"ஐங்கோ சமான வயலில் விளையும் "அஹம்" என்னும் உளுந்தை, "நான்யார்" எனும் விசாரம் என்ற எந்திரத்தில் உடைத்துப் பொடித்து, சத்சங்கமெனும் பிரண்டை ரசத்தோடு, சம-தமமாகின்ற ஜீரக மிளகுடன் சேர்த்து, உப ரதியை உப்பாகப் போட்டு, ஸத்ஸம்ஸ்காரமான பெருங்காயத்தைக் கூட்டி, தன் நெஞ்சையே கல்லுரலாகத் திடமே உருச் செய்து, அதில் உள்முக தியானம் எனும் உலக்கையால் இடித்து" சாந்த மாம் குழவியால் சமமான பலகையில் அப்பளமாக இட்டு அதை சாப்பிட்டு உன் ஆசையை தீர்த்துக் கொள்! என்று.



அன்று அஞ் ஞானியாக சற்று தடுமாறி விட்ட அன்னை தயாரித்தது “ த்வைத“ மாகிய இரட்டை அப்பளம்!

முழு ஞானியாக ஜொலித்த பகவான் ரமணர் படைத்தது ஒற்றையான அத்வைத அப்பளம்!!


இப்படி ஏராளமான சுவையாகவும், பக்தி உணர்வை தூண்டும் வண்ணமும் பகவான் ரமணரின் சரித்திரத்தில் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

இந்த பல்வ ஆண்டின் மார்கழி ஆறாம் தேதி கூடிய செவ்வாய்க்கிழமையில் ( ஆங்கிலதேதி 21.12.2021) பகவான் ரமணரின் ஜெயந்தி புண்ணிய தினம் வர உள்ளது. அன்றும் அந்த பரிபூரணரை துதித்து உலக நன்மைக்கு பிராத்தனை புரிவோமாக!

# டிசம்பர் மாத ராசி பலன் – 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

## மேஷம்



இந்த மாதம் குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும். தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இருவருக்கும் இடையே அன்னியோன்யம் கூடும். உறவினர்களுக்கு இடையே சுமுகமான உறவு நீடிக்கும். திருமணம் தாமதமானவர்களுக்கு திருமண முயற்சிகள் கை கூடும். இந்த மாதம் புதிய தொழில் முதலீடுகள் மூலம் நல்ல தன லாபத்தை ஈட்ட முடியும். ஆயத்த ஆடை ஏற்றுமதி துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள். பிரயாணம் சம்பந்தப்பட்ட தொழில் புரிபவர்களுக்கு நல்ல தனலாபம் ஏற்படும். இந்த மாதம் உத்தியோகத்தை பொறுத்தவரை மந்த நிலை காணப்படும். உரித்த நேரத்தில் பணிகளை முடிக்க முடியாமல் போகலாம். சுயதொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவார்கள். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் நல்ல வருமானத்தை காண்பதன் மூலம் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். மென்பொருள் தொழிலில் உள்ளவர்கள் நல்ல ஏற்றத்தை காண்பார்கள். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். வயிறு சம்மந்தப்பட்ட உடல் நல பாதிப்பு ஏற்படலாம். ஆரோக்கிய உணவு உட்கொண்டு இந்த பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம். வயது மூத்தவர்களின் உடல் நிலையில் சிறிது கவனம் தேவை. மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் வெற்றி காண்பார்கள்.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 19, 27, 29, 31.

அசுப நாட்கள்: 3, 4, 5, 22, 23.

# ரிஷபம்



இந்த மாதம் தங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம். உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நீண்ட தூர பயணங்களுக்காக அதிகம் செலவுகள் செய்வீர்கள். காதல் உறவில் உள்ளவர்களுக்கு இடையே மனஸ்தாபங்கள் உண்டாகலாம். கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் இருவருக்குள்ளும் நல்லிணக்கம் காணப்படும். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றுவார்கள். கூட்டுத் தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். ஆடைகள் தயாரிக்கும் தொழிலில் நல்ல தன வருவாய் கிடைக்கும். தங்க நகை தொழில் செய்பவர்களுக்கு அதிக வாடிக்கையாளர்கள் கிடைப்பதன் மூலம் நல்ல லாபம் கிடைக்கும். இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்க வாய்ப்பில்லை. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ஒற்றைத்தலை வலி சளித் தொல்லை, மூக்கடைப்பு மற்றும் ஜுரம் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. ஆரோக்கிய உணவு மற்றும் அதிக நீர் அருந்துவதன் மூலம் மேற்கூறிய பாதிப்புகளில் இருந்து வெளியேவரலாம். மாணவர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும். படிப்பில் வெற்றி கிடைக்கும்.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 19, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 5, 22, 23.


# மிதுனம்



இந்த மாதம் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். அதிக பணிகள் காரணமாக உங்களால் குடும்பத்திற்கென அதிக நேரத்தை ஒதுக்க இயலாது. குடும்பத்தில் உள்ள வயது மூத்தவர்களிடம் கருத்து வேறுபாடுகள் காரணமாக வாக்குவாதங்கள் எழும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை பயக்கும். திருமணம், குழந்தைப் பிறப்பு போன்ற சுப காரியங்களுக்கான விரயங்கள் ஏற்படலாம். இந்த மாதம் புதிய ஆடைகள் மற்றும் நகைகள் வாங்குவதற்காக செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். அரசு உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் கூடும். வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும். வெளி நாட்டில் வேலை கிடைக்கும். வெளிநாட்டு பிரயாணம் தொடர்பான தொழில் நடத்துபவர்களுக்கு தொழிலில் நல்ல தன லாபம் உண்டு. அழகு சாதனம் சம்மந்தப்பட்ட தொழில் செய்பவர்கள், வெளிநாடு மற்றும் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மூலம் தனம் ஈட்டுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வரலாம்.
மாணவர்கள் படிப்பில் சில தடைகள் இருந்தாலும் இந்த மாத கடைசி பகுதியில் படிப்பில் ஏற்றம் காண்பார்கள்.

சுப நாட்கள்: 2, 13, 19, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 7, 8, 9, 22, 23.

# கடகம்



இந்த மாதம் குடும்பத்தில் உள்ளவர்களிடம் மதிப்பும் மரியாதையும் கூடும், நல்லுறவு நீடிக்கும். காதல் உறவில் மனஸ்தாபங்கள் உண்டாகலாம். கவனம் தேவை. கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். நண்பர்களிடம் நல்ல சுமுகமான உறவு நிலை காணப்படும். இந்த மாதம் பணப் புழக்கம் நன்றாக இருக்கும். பழைய கடன்கள் எல்லாம் அடைபடும். சொகுசான வாழ்கையை ஏற்படுத்திக்கொள்ள அதிகம் ஆடம்பர செலவுகள் செய்யும் வாய்ப்புகள் உள்ளது. உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே மனதில் சிறிது பதட்ட நிலை காணப்படும். சுய தொழில் செய்பவர்கள் புதிய தொழில் ஒப்பந்தங்கள் மூலமாக புதிய வாடிக்கையாளர்களைப் பெறும் வாய்ப்புகள் ஏற்படும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் என்றாலும் சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல் உபாதைகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டியது அவசியம். மாணவர்கள் படிப்பில் சில தடைகளை சந்திப்பார்கள்.

சுப நாட்கள்: 2, 8, 13, 19, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 9, 10, 11, 22, 23.

# சிம்மம்



இந்த மாதம் திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு தக்க துணை கிடைக்க உகந்த மாதம் ஆகும். காதல் உறவில் இருப்பவர்கள் துணை மூலம் தன லாபத்தையும் பரிசு பொருட்களையும் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளது. தம்பதிகளிடையே இருவரும் சேர்ந்து உல்லாச பயணங்கள் மேற்கொள்ளும் வாய்ப்பும் உள்ளது. நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் மற்றும் குடும்பத்தில் உள்ள பெரியவர்களுடனான உறவு நன்றாக இருக்கும். புதிய முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. போரெக்ஸ் டிரேடிங் மற்றும் கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்வது அதிக லாபத்தை கொடுக்கும். கருவூலம் மற்றும் பணம் சம்மந்தப்பட்ட தொழில் செய்பவர்களுக்கு தன நிலை உயரும். கடன் உதவியை எதிர்பார்த்து காத்திருந்தவர்களுக்கு நண்பர்களிடம் இருந்து கடன் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரியின் பாராட்டை பெறும் வாய்ப்பு உள்ளது. புதிய பொறுப்புகள் தேடிவரும், சுய தொழில் செய்பவர்கள் அதிக லாபங்களை எதிர்பாக்கலாம். புதிய தொழில் ஒப்பந்தங்கள் மூலம் தொழிலில் ஏற்றம் உண்டாகும். இந்த மாதம் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கால் மூட்டு அல்லது இடுப்பு பகுதியில் வலி ஏற்பட வாய்புள்ளது. உங்கள் உடல் நலனை பாதுகாத்துக் கொள்ள பரிசோதனை மேற்கொள்வது நல்லது. தாயார் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் படிப்பில் முதன்மை பெறுவார்கள்.

சுப நாட்கள்: 2, 8, 9, 19, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 11, 12, 13, 14, 22, 23.



# கன்னி

இந்த மாதம் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். காதல் உறவில் இருப்பவர்களுக்கு தனது துணையுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாக வாய்ப்புகள் உள்ளன. உங்கள் துணையுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நன்மை பயக்கும். நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதற்காக செலவுகள் செய்வீர்கள். பங்கு மற்றும் பொருள் வர்த்தகத்தில் ஏற்றம் காணலாம். பிட் காயின் வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. தனியார் துறையில் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும். அதனால் வருமானமும் உயரும். பணியிடத்தில் உங்களுக்கு நல்ல பெயரும் புகழும் கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புகள் மூலம் நீங்கள் முன்னேற்றம் காண்பீர்கள். சுய தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஒவ்வாமை அல்லது ஆஸ்துமா போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. துரித உணவுகளை தவிப்பது நன்மை பயக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனச்சிதறல்கள் ஏற்படலாம் கவனமுடன் படிக்கவும்.

சுப நாட்கள்: 2, 8, 9, 10, 13, 19, 22, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 14, 15, 16, 22, 23.



# துலாம்

இந்த மாதம் குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். இளைய சகோதர சகோதரிகளுடனான உறவுகள் பலப்படும். காதலில் வெற்றி கிடைக்கும். காதல் துணையுடன் வெளி நாடுகளுக்கு இன்பச்சுற்றுலா சென்றுவருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு ஏற்ற வாழ்க்கை துணை அமையும். இந்த மாதம் யூக வணிகமான போரெக்ஸ் டிரேடிங் முதலீடுகள் மூலம் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம். கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்வதையும் தவிர்க்க வேண்டும். நீங்கள் தனியார் துறையில் வேலை பார்ப்பவர் என்றால் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வை எதிர்பார்க்கலாம். விளம்பரத்துறை மற்றும் நீதித்துறையில் பணி புரிபவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். சகப்பணியாளர்களின் ஆதரவுடன் பணிகளை விரைவாக முடிப்பீர்கள். சுயதொழிலில் லாபம் ஏற்றம் மிகுந்து காணப்படும். கூட்டுத்தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தொழில் கூட்டாளிகள் உங்களுக்கு நல்ல ஒத்துழைப்பு அளிப்பார்கள். பட்டு ஜவுளி தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். இந்த மாதம் அதிக பணிச்சுமை கராணமாக மன பதட்டம் மற்றும் மனச்சோர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. கல்வித் துறை சம்மந்தப்பட்ட படிப்பு பயிலும் மாணவ மாணவியர்கள் இந்தமாதம் சிறப்புற செயலாற்றுவார்கள். தேர்வில் சிறந்த முறையில் வெற்றி பெறுவார்கள்.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 16, 17, 18, 19, 22, 23.


# விருச்சிகம்



இந்த மாத நிதிநிலையைப் பொறுத்தவரை சாதகமான நிலை காணப்படும். திருமண முயற்சிகள் தாமதமானவர்களுக்கு வெற்றி கிடைக்கும். கணவன் மனைவிக்கு இடையே இணக்கம் அதிகரிக்கும். சகோதர சகோதரிகளிடம் நல்லிணக்கம் காணப்படும். வங்கித் துறை, ஊடகத் துறை மற்றும் பொழுதுபோக்குத் துறையில் வேலை செய்யும் அன்பர்களுக்கு பொருளாதாரத்தில் உயர்வு உண்டு. இந்த மாதம் பழைய கடன்கள் அடையும். புதிய வங்கிக்கடன் எதுவும் இந்த மாதம் வாங்கும் எண்ணம் இருந்தால் அதனை தவிரப்பது நல்லது. தனியார் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளுங்கள். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணியிடத்தில் உங்கள் பெயரும் புகழும் கிடைக்கும். வேலை நிமித்தமாக நீங்கள் வெளியூர் செல்லும் வாய்ப்பு ஏற்படும். சுய தொழில் சம்பந்தமான பயணங்கள் உங்களுக்கு வெற்றியை கொடுக்கும். இந்த மாதம் உங்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். தொழில் சார்ந்த பொறுப்புகளை எடுத்து சிறப்பாக நடத்தும் திறமை உங்களுக்கு உண்டு. மாணவர்களுக்கு ஆசிரியர்களின் ஆதரவு உண்டு. ஆசிரியர்களின் ஆதரவு மூலம் தேர்வில் வெற்றி பெற சாதகமான சூழ்நிலை உள்ளது.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 27, 29, 31.
அசுப நாட்கள்: 19, 20, 21, 22, 23.

# தனுசு



இந்த மாதம் குடும்பத்தில் உள்ளவர்களிடம் உறவு நிலை சிறப்பாக இருக்கும். உங்களுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். திருமணமான அன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும். இந்த மாதம் பணப் புழக்கம் நன்றாக இருக்கும். சுயதொழிலில் தன வருவாய் கணிசமாக உயரும். பழைய வங்கிக்கடன் அடைபடும். இந்த மாதம் வீட்டு உபயோக பொருட்களை வாங்க செலவு செய்வீர்கள். குடுமபத்தில் வசதிகள் மற்றும் ஆடம்பரம் பெருகும். எதிர் கால நலன் கருதி சேமிப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் உயர்வு ஏற்படும். வருமானத்தில் உயர்வும் கிடைக்கும். உங்கள் போட்டியாளர்களை சமாளித்து உத்தியோகத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். தகவல் தொடர்புத் துறை மற்றும் அச்சுத் துறையில் பணிபுரிபவர்களுக்கு பணியில் நல்ல முன்னேற்றம் உண்டு. சுய தொழிலில் இருப்பவர்கள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். வியாபாரம் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை எட்ட கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கும். ஏற்றுமதி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் காண்பார்கள். உடல் ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்காது என்றாலும் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். கண் சம்பந்தமான பிரச்சனைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. வீட்டில் உள்ள வயதானவர்களின் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 19, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 21, 22, 23, 24.

# மகரம்



இந்த மாதம் குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் காணப்படும்.
காதல் உறவில் இருப்பவர்கள் தங்கள் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் காதல் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் காணப்படும். தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வாக்கில் கவனம் தேவை. நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். தொழிலில் தன வரவு அதிகரித்து காணப்படும். பங்கு வர்த்தகத்தில் ஏற்றம் கிடைக்கும். இந்த மாதம் வீட்டிற்காக செலவுகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகம் செய்யும் இடத்தில் புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். உத்தியோகத்தில் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். மேல்லதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். ஏற்றுமதி தொடர்புடைய தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக லாபத்தை காண்பார்கள். கூட்டுத் தொழிலில் பெயரும் புகழும் கிடைக்கும். உணவு சம்மந்தப்பட்ட தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக பண வரவைக் காண்பார்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தாயாருக்கு ஒற்றை தலைவலி போன்ற உடல் உபாதைகள் ஏற்படும். வெளிநாடு சென்று பயில விரும்பும் மாணவர்களுக்கு வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 19, 27, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 22, 24, 25, 26.

# கும்பம்



இந்த மாதம் கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். திருமணமான தம்பதிகளுக்கு இடையே அன்னியோன்யம் அதிகரித்து காணப்படும். உங்கள் தந்தை வழி உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். உங்கள் வாக்கில் கவனம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும். உணவு தொடர்பான தொழில் நடத்துபவர்கள் சிறந்த தன ஆதாயம் காண்பார்கள். வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும். நிதி நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பங்கு மற்றும் தகவல் தொடர்பு தொழிலில் செய்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியது இருக்கும். இந்த மாதம் உங்கள் தொழிலில் போட்டிகள் நிறைந்து இருக்கும். கூட்டுத்தொழிலில் சுமாரான லாபங்களை எதிர்பார்க்கலாம். மளிகை மற்றும் பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் காண்பார்கள். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு பிரச்கனைகள் வரலாம். தாய் மற்றும் தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் அதிக முயற்சியுடனும் கவனமுடனும் படிக்க வேண்டும்.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 19, 29, 31.
அசுப நாட்கள்: 3, 4, 22, 26, 27, 28.

# மீனம்



இந்த மாதம் குடும்ப உறவுகளுக்கு இடையேயான உறவு நிலை சிறப்பாக இருக்கும். குழந்தைகளுடனான உறவு வலுப்படும். தம்பதிகளுக்கு தாம்பத்யத்தில் நல்லிணக்கம் கூடும். குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் நிதிநிலை மேம்படும். நீங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இது ஏற்ற மாதமாகும். இந்த மாதம் வீடு பராமரித்தல் போன்ற வகையில் செலவுகள் ஏற்படும். தனியார் உத்தியோகத்தில் பணியில் இருப்பவர்கள் பேச்சில் கவனமாக இருக்க வேண்டும். வாக்குவாதத்தை தவிர்க்க வேண்டும். அரசு உத்தியோகத்தில் பணிபுரிவோர் தன்னம்பிக்கையுடன் செயல்படவேண்டும் இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும். தொழில் போட்டியாளர்களை உங்கள் முயற்சியின் மூலம்  வெற்றி காண்பீர்கள். இந்த மாதம் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் ஏதும் இருக்காது. நோய் வந்தாலும் எளிதில் குணமாகும். மாணவர்களின் கவனிப்புத் திறன் அதிகரிக்கும். அவர்கள் சிறப்பாக தேர்வுகளை எழுதி வெற்றி காண்பார்கள்.

சுப நாட்கள்: 2, 8, 9, 13, 19, 29, 31.
அசுப நாட்கள்: 1, 2, 3, 4, 22, 23.